விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (15.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361




## சோசலிச சமத்துவக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சோசலிச சமத்துவக்கட்சி போட்டியிடவுள்ளது. இந்தக்கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் விஜய டயஸ் போட்டியிடவுள்ளார்.

சோசலிச சமத்துவ கட்சி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக நேற்று உத்தி யோக பூர்வமாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் தொடர்ந்தும் தாக்கல் செய்யப் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கியஸ்தர்களின் கொலைக்கு மகிந்தவும் பொன்சேகாவுமே பொறுப்பு

### இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலை புலிகளின் முக்கியஸ்தர்களை கொலை செய்த பொறுப்பை முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் யுத்தத்தின் போது இராணுவத்தளபதியாக பதவி வகித்த ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஏற்க வேண்டும் என இடதுசாரி முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவர்களின் இந்த நடவடிக்கை காரணமாக சர்வதேச ரீதியாக வரும் அழுத்தங்களை இந்த நாட்டு மக்களே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இவ்வாறு கூறினார். செய்தியாளர் (16ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த ஐ.தே.க.திட்டம்!

## பொன்சேகாவுக்கு ஆதரவு திரட்ட முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவை பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் இந்தியாவில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலரை சந்தித்து இது தொடர்பாக பேசவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக்காலத்தில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு நானே பொறுப்பு

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடைபெற்று முடிந்த யுத்தத்தின் போது இடம்பெற்ற சகல சம்பவங்களுக்கும் இராணுவப் படைத் தளபதி என்ற ரீதியில் தாம் பொறுப்பேற்பதாக எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## போலித் தரகர்களிடமிருந்து இலங்கையர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்

### மலேசியா வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை அகதிகள் போலித் தரகர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென மலேசிய அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து அனேக இலங்கையர்கள் மலேசியாவிற்கு அழைத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ்வாறு மலேசியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்களில் பெரும்பாலானோர் போலி முகவர்களினால் ஏமாற்றப்படுவதாக சுட்டிக் (16ஆம் பக்கம் பார்க்க)

## பலமிழுந்தது வோர்ட் சூறாவளி; மீண்டும் வலுப் பெறலாம் என அச்சம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் 250 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்த வோர்ட் சூறாவளி பலமிழந்து திருகோணமலை, முல்லைத்தீவிற்கு இடையே 90 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

எனினும் வோர்ட் சூறாவளி மீண்டும் வலுப் பெற்று இலங்கையின் வட பகுதியைத் தாக்கலாம் என வானிலை அவதானிப்பு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பொலநறுவை, அநுராதபுரம், மட்டக்களப்பு மாவட்டங்களில் சில தினங்களிற்கு கடும் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சமூகத்தின் கோரிக்கைகள் பொன்சேகாவை சென்றடைந்தது

### ஜனநாயக மக்கள் முன்னணி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூகத்தின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தூதுக்குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை சந்தித்து விளக்கியுள்ளனர். மனோ கணேசன் எம்.பியின் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் தூதுக்குழுவினர் நேற்று முற்பகல் எதிர்க் கட்சி பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என ஜனநாயக மக்கள் முன்னணிவிடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்திக்குறிப் பில் மேலும் தெரிவிக் (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம் எழுதும் குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு இன்றுமுதல் காலையில் பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு இன்று முதல் தினமும் காலை 10 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பிரதேசம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வருடத்தில் குறித்த விசேட தினங்களில் மட்டுமே கீரிமலை நகுலேஸ் வரர் ஆலயத்திற்கு செல்ல படையினர் கட்டுப்பாட்டுடன் (16ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகங்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

(கொழும்பு)

அரச ஊடகங்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

அரசாங்கத்தின் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு எதிராக மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீனத் தொலைக்காட்சி மற்றும் அசோசியேட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் ஆகிய ஊடகங்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தற்காலிக அடையாள அட்டை பெற விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வாக்களிப்பதற்கு அடையாள ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது வாக்களிப்பதற்குத் தகைமையளிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளரினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பிரதேச செயலர்களுக்கும் தற்போது கையளிக்கப்பட்டுள்ளன என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

எனவே இவ் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் உடனடியாகத் தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

வாக்களிப்பதற்குத் தேர்தல் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட அடையாள ஆவணங்களாக; ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய் வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை,

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வணக்கத்துக்குரியவர்களுக்காக வழங்கப்பட்ட அடையாள அட்டை, 2010 ஆம் ஆண்டில் நடத்தப்படும் வாக்கெடுப்புக்களின் போது வாக்களிக்கும் நடவடிக்கைகளுக்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை என்பன அறி விக்கப்பட்டுள்ளன. (ச)

# ஐ.தே.க. மட்டு. முகாமையாளரின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் அரசரட்ணம் சசிதரனின் இல்லம் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள அவரது இல்லம் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலின் போது அவரும் அவரது குடும்பத்தினரும் அங்கு தங்கியிருந்தனர்.

சம்பவத்தின் போது பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸார் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபோதிலும் சந்தேக நபர் தப்பியோடிவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் கரு ஜெயசூரிய மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டு அரசரட்ணம் சசிதரனின் இல்லத்தில் கட்சிப் பிரமுகர்கள் சந்திப்பொன்றில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியான பின் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற முத

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பரிகார கற்பித்தல் செயலமர்வு நேற்றுத் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற செயலமர்வில் பங்கு பற்றாத ஆசிரியர்கள் இச் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச-7,14)



**யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சமூகவியல்துறை ஆகியன யாழ்.செயலகத்துடன் இணைந்து நடத்திய மரபுரிமை முகாமைத்துவப் பயிலரங்கு நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தலைமையுரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தொடக்கவுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.**

# வடக்கில் நீதிமன்றக் கட்டமைப்பை விஸ்தரிக்க உயர்மட்டக் குழு நியமனம்

வட மாகாணத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் நீதித்துறைக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கும் நீதிமன்ற நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் உயர் மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் நியமிக்கப் பட்டுள்ள இக் குழு 3 உறுப்பினர்களைக் கொண்டது என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் கே.சிறிபவன் தலைமையிலான இந்தக் குழுவினர் 30 வருட மோதல் முடிபுக்கு வந்ததையடுத்துச் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்டும் வகையில் செயற்படவுள்ளனர்.

நீதி மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சுக்களின் அதிகாரிகளும் சிறைச்சாலை பிரதம அதிகாரிகள் ஆகியோருடன் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றார்.

வட மாகாணத்தில் நீதிமன்றக் கட்டமைப்புக்கான கட்டடங்கள் உட்பட அடிப்படை வசதிகள், நிர்வாகக் குழுவினருக்கான பயிற்சிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு இந்தக் குழுவினர் செயற்படவுள்ளனர்.

அத்துடன் சிறைச்சாலைகள் மற்றும் சிறைக்கூடங்களையும் மேம்படுத்துவதற்கு இந்தக் குழு கவனம் செலுத்தவுள்ளது. சட்டக் கல்வி, பொதுமக்களுக்குச் சட்ட ஆலோசனை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்தக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-3)


**Hatton National Bank**

**அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.10.2008 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகு நகைகள் 19.12.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி

(C-3933)


# வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல் பிரசார வழிமுறையைத் தாம் ஒருபோதும் விரும்புவதில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வன்னி தொண்டர் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

நேற்றுக் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.பணிமனைக்கு வருகை தந்திருந்த வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில், தவறான தமிழ்த் தலைமைகளின் வழிநடத்தலின் விளைவாக மக்கள் எதிர்கொண்ட சொல்லொண்ணாத் துன்பங்களின் அனுபவத்தைச் சரியாகச் செரிமானம் செய்து கொண்டு எதிர்காலத்தில் நேர்மையான தமிழ்த் தலைமை ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

இந்த நேர்மையான அமைதியான சூழலை யாருக்கும் தாரைவார்த்து விடாமல் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பான பணி. எதிர்காலத்தில் உங்கள் அனைத்து அடிப்படைச் சுதந்திரங்களையும் பாதுகாத்துக் கொண்டு உங்களின் வாழ்வை வளமானதாக அமைத்துக் கொள்வதற்கு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் உரிய ஒத்துழைப்பினை வழங்குவதன் ஊடாக உங்கள் அனைவரினதும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் நிம்மதியானதாகவும் சுபீட்சமானதாகவும் அமைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேச தொண்டர் ஆசிரியர்களின் இக்கட்டான நிலைமையைக் கவனத்தில் கொண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விசேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தேர்தல் முடிபடைந்த பின்னர் நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு ஜனாதிபதியுடனும் கல்வி அமைச்சருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (ச)


**தேவை**

யாழ்.நகரில் இயங்கும் வியாபார நிலையத்திற்கு கணனி இயக்குநர், சுவிற் ரிக்கற் விற்பனையாளர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
சிறி துர்காதேவி பல்பொருள் வாணிபம்
இல.63, K.K.S.Road, சுன்னாகம்.
(HNB முன்பாக)
T.P:021 224 0172

(C-3931)


# சரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கருத்து வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத் தரப்பு ஆலோசித்து வருகின்றது.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஊடாக சரத் பொன்சேகாவுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் யுத்தம் தொடர்பான விடயங்களையோ அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்தும் கருத்துக்களையோ ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரை சரத் பொன்சேகா வெளிப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தவும் அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரியவந்துள்ளது. (ச-5)


**வரவேற்பாளர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை**

எதிர்வரும் 18ம், 19ம் திகதிகளில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பாளர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாணம்.

(C-3932)

# இன்று ஒரு தகவல்

## கல்விச் செல்வம்

ஒரு பசு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இது ஒரு பொருளை உருட்ட வேண்டுமானால் தானாகவே போய் உருட்டி உடைக்கும்.

ஒரு ஆளை முட்ட வேண்டுமானால் தானாகவே போய் முட்டும். இதெல்லாம் கெட்ட காரியங்கள்.

இதையெல்லாம் செய்யும் அந்தப் பசு பால் கொடுப்பது நல்ல காரியம்.

அதைத் தானாக கொடுக்காது. தானாகவே வீட்டுக்கு வந்து எங்கே செம்பைக் காணவில்லையே என்று தேடி எடுத்து... கொல்லைப் பக்கமாக கொண்டு போய் தானாகவே கறந்து கொண்டு வந்து நம் கையில் கொடுத்து பத்திரமாக வையுங்க ... பூனை கீனை வந்து குடித்து விடப் போகிறது என்று சொல்லி விட்டுப்போகாது.

அதனால் நல்ல காரியத்தை மனிதன் தானாகவே செய்ய வேண்டும் என்கிறார் பார் திருக்குறளார் வீ.முனுசாமி.

இந்த உலகத்தில் எல்லாச் செல்வமும் அழிந்து விடும். ஆனால் கல்விச் செல்வம் அழியாது என்பதை வேடிக்கையாகவும் விளக்கமாகவும் அவர் சொல்லுவார்.

அவர் ஒருநாள் வெளியூர் போயிருந்தாராம். அப்பொழுது அவருடைய நண்பர் ஒருவரைப் பார்த்துக் கேட்டாராம்.

"இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்ததே... அது எங்கே?" என்று கேட்டாராம்.

"அது புயல் காற்றில் விழுந்து விட்டது" என்றாராம் அவர். இது அழிகின்ற செல்வம்.

"அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்ததே அது எங்கே?" என்று கேட்டிருக்கிறார்.

"அது மழை பெய்த போது இடிந்து விழுந்து விட்டது" என்று சொன்னார்களாம். இதுவும் அழிகின்ற செல்வம்.

சிலபேர் பார்ப்பதற்கு அழகாக இருப்பார்கள் அழகும் அழிகின்ற செல்வம் தான்.

அழகு கொஞ்ச நாளைக்கு இருக்கும். அதன்பின் போய் விடும். அதனால் தான் சிலபேர் அவசர அவசரமாக போட்டோ எடுத்து வைத்திருப்பார்கள்.

இருப்பதும் போய்விடப்போகிறது என்ற பயம். ஆனால் கல்வி அப்படிப்பட்டதல்ல.

"அதோ... போறாரே... அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எம்.ஏ. பாஸ் பண்ணியிருந்தார். இப்பொழுது எல்லாம் செலவாகிப் போய் எட்டாவது வகுப்புக்கு வந்து விட்டார்" என்று சொல்லமாட்டோம்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை" என்கிறார் திருவள்ளுவர்.

கல்வி – பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும்.

பணம் – பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க குறையும்.

அதனால் தான் பணத்தை இன்னொருவருக்குக் கொடுத்தால் திருப்பிக் கொடு என்று கேட்கிறோம்.

ஏனென்றால் அது குறைந்திருக்கிறது.

ஆனால் கல்வி அப்படியல்ல.

ஒரு ஆசிரியர் வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அவர்களெல்லாம் பாஸாகி அடுத்த வகுப்புக்குப் போகிறார்கள். அப்படிப் போகிறவர்களுக்கு ஆசிரியர் வாழ்த்துச் சொல்லி அனுப்புவார்.

"என்னிடமிருந்த கல்வியை எல்லாம் உங்களிடம் சொல்லிக் கொடுத்துவிட்டேன். அடுத்தவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க மிச்சம் மீதியில்லை. அதனால் அதையெல்லாம் கொடுத்து விட்டுப் போங்க" என்றா கேட்பார்? கேட்க மாட்டார்.

கல்வி என்பது கொடுக்கக் கொடுக்க வளரும் என்று விளக்கம் கொடுப்பார் திருக்குறளார்.

அதனால் தான் 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றார் திருவள்ளுவர். இன்னொரு முக்கியமான கருத்து.

படிப்பு என்பது வேறு – பண்பாடு என்பது வேறு

பண்பாட்டை வளர்க்காத படிப்பு பிரயோசனமில்லை. அதற்கும் வேடிக்கையாக ஒரு செய்தி சொல்லுவார் திருக்குறளார்.

பலபட்டங்களெல்லாம் வாங்கிய ஒரு பெரிய படிப்பாளி இருந்தார். அவரைப்பற்றி இன்னொருவர் இப்படி அறிமுகப்படுத்தினாராம்.

"அதோ போகிறாரே... அவர் பெரிய படிப்பாளி. நாலு எம்.ஏ. பட்டம் வாங்கியிருக்கிறார். இருந்தாலும் ஒரு விடயம்... அவ்வப்போது கொஞ்சம் திருடுவார்.... அவ்வளவு தான்!" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை மாணவர்களின் மேம்பாட்டுக்காக உலக வங்கியின் புதிய நிதித் திட்டம்

## அமைச்சர் விஸ்வ வர்ணபால

(கொழும்பு)

இலங்கையில் உயர் கல்வியைக் கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி 4 ஆயிரத்து 650 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டமொன்றினை 2010 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கவுள்ளது என உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிடுகையில்,

இதற்கு முன்னர் அமுலிலிருந்த உலக வங்கியின் திட்டத்தின் பிரகாரம் பட்டதாரிகளின் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவடைவதால் உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் நான் நடத்திய சுமூகமான பேச்சுவார்த்தையின் பயனாக, எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நிதியினை வழங்குவதற்கு உலகவங்கி இணங்கியுள்ளது.

எமது நாட்டில் குறைந்த அளவிலான வருமானத்தைப் பெறுவோரது குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் முதல் நடுத்தர மாணவர்கள் முதல் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள மாணவர்களது உயர் கல்விக்கு உதவும் பொருட்டு, எமது உயர்கல்வியை மேலும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை குறித்தும் நான் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு சுட்டிக்காட்டிய போது, அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டு தேவையான நிதியுதவிகளை வழங்குவதாக உறுதி மொழி வழங்கியிருந்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியின் மூலம் தேசிய மட்டத்தில் உயர் கல்வியின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தல், பல்கலைக்கழகங்களை அபிவிருத்தியடைச் செய்தல், மாற்று உயர்கல்வித்துறை தொடர்பில் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் பங்களிப்பினை வழங்குதல் அதன் பிரதான நோக்கங்களாக உள்ளன என்றார். (6-2)

# க.பொ.த உயர்தர விடைத்தாள்களின் மீள்பரிசீலனைக்கான கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வழங்கப்பட்டிருந்த கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் நேற்றுடன் முடிவடைய இருந்தது.

எனினும் இது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அதிபர்களினதும் தனிப்பட்ட ப்ரீட்சார்த்திகளினதும் வேண்டுகோளுக்கிணங்க இந்த நீடிப்பை மேற்கொண்டதாக பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதன்படி தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபரினூடாக உரிய முறைகளுக்கமைய விண்ணப்பிப்பது அவசியமாகும்.

*இலங்கை பரீட்சைத் திணைக்களம் தபால் பெட்டி இல. 1503 பத்தரமுல்லை* என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (6-2-4)



தெல்லிப்பளை சுதேச மருத்துவ இல்ல கால்கோள் விழாவில் ஆயுள்வேத பாதுகாப்புச் சபை செயலாளர் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் சிறப்புரையாற்றுவதையும், சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, அமைச்சின் செயலாளர் அசோகபீரிஸ், ஆயுள்வேத ஆணையாளர் திருமதி ரமணி குணவர்த்தன, டாக்டர் சி. சுப்பையா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம் : கே. விஜயகாந்)

# இராசி பலன்

*15-12-2009*

*(கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை)*

*சதுர்த்தசி பிற்பகல் 5.02 மணிவரை*

*அனுசம் பிற்பகல் 3.30 மணிவரை*

*இராகுகாலம் 3.21-4.51 மணிவரை*

*சுபநேரம் 10.51-12.21 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | வீண் தொல்லை, வாகன பயம், எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| இடபம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, முயற்சிகைகூடும், நல்லசெய்தி. |
| மிதுனம் | பணவருவாய், சுகவாழ்வு, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| கடகம் | சிறுவியாதி, அதிக பிரயாசை, குடும்பக் கவலை, பணக்குறைவு. |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், தனவிரயம், ஆரோக்கியக்குறைவு, பயந்த சுபாவம். |
| கன்னி | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை. |
| துலாம் | கௌரவக்குறைவு, கோபப்படுதல், எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம். |
| விருச்சிகம் | சயனசுகம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை. |
| தனுசு | பிதாசிந்தை, மனமகிழ்ச்சி, பிரயாணம், சுபசெலவு. |
| மகரம் | எதிர்பாராத நன்மை, மனமகிழ்ச்சி, பெருமையடைதல், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | கடினஉழைப்பு, சுபநிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி |
| மீனம் | பித்தரோகம், அதிக பிரயாசை, கஷ்ரமானநிலை, திடீர் பயணம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 240 | 300 | 270 |
| தக்காளி | 140 | 140 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 90 | 110 | 110 |
| பூசணி | 50 | 60 | 60 |
| புடோல் | 70 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 130 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 |
| கரணைக்கிழங்கு | 40 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 70 | -- | .100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 180 | 200 | -- |
| போஞ்சி | -- | -- | -- |
| கத்தரி தம்புள்ள | -- | -- | -- |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 170 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |

# சர்வதேச சதியின் அங்கமாகவே பொன்சேகா செயற்படுகின்றார்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷ மற்றும் படைவீரர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் சர்வதேச சதியின் ஒரு அங்கமா கவே சரத்பொன்சேகா தற்பொழுது செயற்படுவதாக தேசிய சுதந் திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.**

மிலேனியம் சிட்டி காட்டிக் கொடுத்தல் சம்பவத்தை விட மிகவும் பாரதூரமான காட்டிக்கொடுத்தலை ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா செய்துள்ளதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

வார இறுதி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு சரத்பொன்சேகா வழங்கியுள்ள செவ்வி தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச மேலும் கூறுகையில்,

சர்வதேச சமூகத்திற்கு எமது தலைவர்கள் மீதும் படைவீரர்கள் மீதும் குற்றஞ்சுமத்துவதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை. களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடனே சரத் பொன் சேகா ஒப்பந்தக்காரராக செயற்படுகின்றார்.

சரத்பொன்சேகா தற்பொழுது ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ளார். எந்த ஒரு வேட்பாளரும் தனக்குள்ள வாக்குகளை தக்க வைத்துக்கொண்டு மேலதிக வாக்குகளை பெறும் முயற்சிகளையே மேற்கொள்ளவார்கள். ஆனால் சரத் பொன்சேகாவின் இந்தக் கூற்று அவருக்கு எந்த வாக்கு அதிகரிப்பை




யும் கொடுக்கப்போவதில்லை. இதன் மூலம் வாக்கு வங்கியை பெறுவதை விட தனது ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படுவதே முக்கியம் என்று தெளிவாகத் தெரிகிறது.

அரச உயர் அதிகாரிகள் ஓய்வுபெறுவது வழக்கம். ஆனால் அவ்வாறு ஓய்வு பெற்ற அல்லது ஓய்வுபெறுவதற்கு முன்னர் ஓய்வினை பெற்றுக்கொண்டு அடுத்த நாளே அரசியலுக்கு வந்ததில்லை .எமது நாட்டில் அரச உயர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று அடுத்த நாளே ஜனாதிபதி வேட்பாளராக வந்த முதல் நபர் சரத்பொன்சேகாவாகும்.

சாதாரணமாக அரசியலுக்கு வரவிரும்பும் எவரும் தனது அரசியல் பயணத்தின் ஆரம்பத்தை ஜனாதிபதி வேட்பாளர் என்று ஆரம்பிப்பதில்லை.



மாகாண சபையிலிருந்தே ஆரம்பிப்பார். ஆனால் சரத்பொன்சேகா படிப்படியாக அரசிலில் நுழையாமல் திடீரென ஜனாதிபதி வேட் பாளராக ஏன் வந்தார் என்று கேள்வி எழும் பியது. இவருக்குப் பின்னர் சர்வதேச சதியும் ஒரு குழுவின் அழுத்தமும் இருக்கின்றமை தெளிவாகத் தெரிகிறது.

பொன்சேகாவின் இதுபோன்ற கூற்றானது, மேலே பார்த்து தனக்குத்தானே எச்சில் துப்புவது போன்ற செயலாகும்.

பொன்சேகாவிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு முடியுமான பொய்களைச் சொல்லி வாக்குகளைக் கேளுங்கள். ஆனால் தாய் நாட்டிற்காக செயற்பட்ட ஜனாதிபதி , பாதுகாப்புச் செயலாளர் , படைவீரர்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் எந்த பொய்யான தகவல்களையும் வெளியிட வேண்டாம். அதற்கு மாறாக அரசியல் வாதிகளான எங்கள் மீது எந்தப் பொய்க்குற்றச் சாட்டுகளையும் முன் வையுங்கள். நாட்டையும் படைவீரர்களையும் காட்டிக்கொடுக்கும் நோக்குடன் முன்னுக்குப் பின் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டு வரும் சரத்பொன் சேகாவை நம்பி மக்கள் எவ்வாறு வாக்குகளை வழங்குவது என்றும் இவரை எவ்வாறு ஜனாதிபதி ஆக்குவது என்றும் விமல் வீரவன்ச இங்கு கேள்வி எழுப்பினார். (ந-5)

## மிலிந்த மொரகொட தலைமையில் இரகசிய கூட்டம்?

(கொழும்பு)

நீதியமைச்சர் மிலிந்த மொரகொட மற்றும் அவர் தலைமை வகிக்கும் இலங்கை தேசியச் சங்கம்ஆகியவற்றை அரசியல் ரீதியாக உயர்த்தும் நோக்கில் நாட்டிலுள்ள பிரபல நபர்கள் சிலர் கலந்துரையாடலுடன் கூடிய விருந்துபசாரத்திற்கு நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுதந்திரவும் அழைக்கப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள சினமன்கிராண்ட் விடுதியின் மொனாஸ் அப்பார்மண்ட், தொடர்மாடி வீட்டுத் தொகுதியிலுள்ள ஜோன் கீல்ஸ் தலைவர் சுசந்த ரத்நாயக்கவிற்குச் சொந்தமான ஆடம்பர வீட்டில் மிலிந்த மொரகொட தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஏ. எம். டபிள்யூ. நிறுவனத்தின் தலைவர் திலக் டி செய்சா, இலங்கைப் புகையிலை நிறுவனத்தின் தலைவர் கே.பண்டாரநாயக்க உள்ளிட்ட நாட்டிலுள்ள முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது மிலிந்த மொரகொடவின் எதிர்கால அரசியல் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு எதிரான முனைப்புக்களைமேற்கொள்ள வேண்டாம் என சுசந்த ரத்நாயக்க உள்ளிட்ட வர்த்தகர்கள் வலியுறுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் நிரந்தரமான கொள்கைகள் எதுவுமில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க



எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு நிரந்தரமான கொள்கைகள் எதுவுமில்லை என ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் ஒருவருக்கொருவர் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அபிவிருத்தித் தொடர்பான எவ்வித திட்டங்களையும் இதுவரை முன் வைக்க வில்லை நாட்டை அபிவிருத்தி செய்யவும் நாட்டை ஒன்றிணைக்கவுமே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

கட்சி மாறும் நடவடிக்கைகளை நோக்கும் போது பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுக்கு நிரந்த கொள்கையில்லை. என்பது புலப்படு கிறது. எனவும் சிறிதுங்க ஜயசூரிய மேலும் கூறியுள்ளார். (ந-5)

## ஜனாதிபதி முறைமையை ஒழிக்காவிட்டால் பதவியை இராஜினாமா செய்வேன் - சரத்பொன்சேகா

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முடியாவிட்டால் பதவியை இராஜினாமா செய்வேன் என ஜெனரல் சரத்பொன்சேகா சூளுரைத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் தாம் வெற்றியடைந்தவுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிப்தி முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு முடியாத பட்சத்தில் தமது பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவியிலிருந்து விலகி விடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.அரசாங்கத்தினால் வழங்கப்படும் வரப் பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு நிம்மதியாக இருந்திருக்கமுடியும் என்ற போதிலும் மக்களுக்காக சேவையாற்றும் நோக்கில் தாம் அரசியலில் களமிறங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## மஹிந்தவின் தேர்தல் பிரசாரம் இந்தியர்கள் இருவர் வருகை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் இலத்திரனியல் தேர்தல் பிரசாரப் பணிகளை ஏற்பாடு செய்வதற்காக ராகுல் பலாண்டி, பாலங்பலாண்டிஆகிய இந்திய பிரஜைகள் இருவர் இலங்கைக்கு வந்திருப்பதாகவும்இவர்கள் இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான சவரின் என்ற விடுதியில் தங்கியிருந்து பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தேர்தல் பணிகளுக்காக நொக்கியா 2700 ரகத்தைச் சேர்ந்த 500 தொலைபேசிகள் நாமல் ராஜபக்ஷவின் இளைஞர்களுக்கான எதிர்காலம் என்ற அமைப்பினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (ந-5)

## தேர்தல் அலுவலகமாக மாறியுள்ள அலரி மாளிகை

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்தப்பட்டு வரும் அலரி மாளிகை ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தும் அலுவலகமாக மாறியுள்ளதுடன் கூட்டத்திற்காக அரச அதிகாரிகளை அழைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் கல்வி நிர்வாகிகளை கடந்த 10 ஆம்திக்தி அலரிமாளிகைக்கு வரவழைத்திருந்த ஜனாதிபதி இரவு விருந்துபசாரமொன்றை வழங்கியதுடன் கடந்த 8 ஆம் திகதியும் இவ்வாறான விருந்து உபசாரமொன்றை நடத்தியிருந்தாராம்.

இதற்கு முன்னர்இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை அழைத்திருந்த ஜனாதிபதி அவர்களுக்கு விருந்தளித்து உபசரித்திருந்தார். கடந்த 8 ஆம்திகதியும் ஊடகவியலாளர் களை அழைத்து இராப்போசன விருந் தொன்றை வழங்கியிருந்தார். நாடு முழுவதிலும் சுமார் 5 ஆயிரம் அரச நிர்வாக ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக மகாநாம, டி.தெஸ்டன், டி.எஸ்.சேனநாயக்க ஆகிய கல்லூரிகளில் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருந்தன என்றும் அந்த நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நாடு முழுவதிலுமுள்ள 287 இணக்கச் சபைகளைச் சேர்ந்த ஆயிரம் பேர் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் வருகைக்காக ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## மலையக அரசியல் கட்சிகளும் சரத்திற்கு ஆதரவளிக்குமாம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணைந்துள்ள மலையக தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவு சரத் பொன்சேகாவிற்கு?

அரசாங்கத்தில் இணைந்துள்ள மலையக தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவு பொது வேட்பாளர் சரத்பொன்சேகாவிற்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதை அடுத்து மலையகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சித்தலைவர் ஒருவருடன் இரகசியமாக பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் பலனாக குறித்த அரசியலில் கட்சி எதிர்வரும் ஜனவரிமாதம் முதல்வாரத்திற்குள் ஐக்கிய தேசிய முன்னணியில் இணையவுள்ளது. இதனைத் தவிர ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரைச் சந்திக்கவுள்ளதாகவும் அந்த சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

78

இவ்வாறு அக்காலத்துப் போக்குகளை அவரிடம் கண்டபோதிலும், உண்மையான கவிஞரின் சிறந்த இயல்புகளையும் அவரிடம் முற்றாகக் காணலாம். மரஞ்செடி கொடிகளையும் பறவை, விலங்குகளையும் அவற்றின் அழகிய காட்சிகளையும் கண்டு மகிழ்ந்த அவருடைய கலையுள்ளத்தைப் பல பாட்டுக்களில் காணலாம். சொற்களைச் சுவைத்து ஆளும் புலவர் என்பதை நயமாக சொல்லமைப்பும் ஓசையினிமையும் உடைய பல பாட்டுகளில் உணரலாம்.

நீதிகளைச் சொல்லுமிடத்தில் சுவை குறையாமல் அழகாக எடுத்துரைக்கும் திறன் அவரிடம் இயல்பாக உள்ளது. நிலையாமையைப் பற்றிக் கூறுமிடத்திலும் சுவை குன்றவில்லை. "இளமை, நீரில் தோன்றும் குமிழி போன்றது. நீரில் எழும் அலைகள் போன்றது செல்வம். உடம்போ, நீரில் எழுதப்படும் எழுத்துப் போன்றது. ஆகவே, நம்மவர்களே, எம் சிவனுடைய அம்பலத்தை வணங்காமல் இருப்பது ஏன்?"

*நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்*
*நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் – நீரில்*
*எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே*
*வழுத்தாதது எம்பிரான் மன்று*

கல்வியைப் பற்றி அவர் எடுத்துக் கூறியுள்ள உயர்ந்த கருத்துக்கள் பல; கல்வியில் தேர்ந்த புலவர்களிடத்தில் பெருமதிப்பு உடையவர் அவர். "பிரமனுடைய முகத்திலேயே கலைமகள் வாழ்கிறாள்.

ஆயினும், அவன் புலவர்களுக்கு நிகர் ஆகமுடியாது. ஏன் என்றால் பிரமன் படைத்த உடம்புகள் அழிகின்றன. ஆனால் புலவர்கள் படைத்த உடம்புகளாகிய நூல்கள் அழியாமல் வாழ்கின்றன" என்கிறார். கலைமகளின் அருளை வேண்டிப் பாடிய சகலகலாவல்லி மாலையிலும் அவர் கவிஞர்க்கு உரிய பெருமிதத்துடன் பாடியுள்ளார். "மண்ணாளும் வேந்தர்களில் சிறந்தவர்களும் என் பாட்டைக் கேட்ட அளவில் பணியுமாறு செய்ய வேண்டும்" என்று வேண்டிப் பாடினார். கலைமகளுக்கும் எவ்வளவு பெருமை தருகிறார்! உலகங்களைக் காக்கும் கடவுளாகிய திருமால் உறங்குகிறானாம்; உலகங்களை அழிக்கும் தெய்வமாகிய சிவன் பித்துப்பிடித்தவனாகி விட்டானாம்; ஆனால் படைக்கும் கடவுளாகிய பிரமன் மகிழ்ந்து சுவைகொள்ளும் கரும்பாகக் கலைமகள் விளங்குகிறாளாம்! இவ்வாறு எதைப் பாடினாலும் நயமும் சுவையும் விளங்கப் பாடிய பெருங்கவிஞர் குமர குருபரர்.

### சிவப்பிரகாசர்

பதினேழாம் நூற்றாண்டின் - தமிழ்ப் புலவர்களுள் சிறந்து விளங்கியவர் இருவர். ஒருவர் குமரகுருபரர். மற்றவர் சிப்பிரகாசர், சிவப்பிரகாசரும், குமரகுருபரர் போல் துறவியே; வீரசைவம் என்னும் சமயத்தைச் சார்ந்தவர் அவர்.

துறைமங்கலம் என்னும் இடத்தில் அமைந்த மடத்தில் வாழ்ந்தவர். வாயின் இதழ் குவியாமல் (ம.ப.வ.ஆகிய எழுத்துக்கள் இல்லாமல்) பாடுவதற்கு உரிய நிரோட்டகம் என்னும் வகையில் யமகம் என்னும் சொல்லணி அமைத்து "நிரோட்டக யமக அந்தாதி" என்னும் நூலை இளமையில் பாடிப் புகழ் பெற்றார். திருவெங்கை என்ற ஊரில் மடம் அமைத்துத் தங்கியிருந்தபோது, அந்த ஊர் பற்றி ஒருகோவையும் கலம்பகமும் பாடினார். தம் ஆசிரியர் மேல் கலம்பகம், தாலாட்டு, பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி, தூது ஆகிய இலக்கிய வகைகள் இயற்றினார். நீதி நூலாக அவர் இயற்றியது நன்னெறி என்பது. திருக்காளத்தி என்னும் தலத்தைப் பற்றிய புராணம் இயற்றத் தொடங்கி ஒரு பகுதியை எழுதினார் அவருடைய தம்பி கருணைப்பிரகாசர் என்பவர். அதற்குப் பிறகு சிவப்பிரகாசர் அதைத் தொடர்ந்து இடைப்பகுதியை எழுதினார்; அதன் பிற்பகுதியை மற்றொரு தம்பி வேலைய சுவாமிகள் எழுதிப் புராணத்தை முடித்தார். இவ்வாறு உடன்பிறந்தார் மூவருடைய புலமையும் பெற்று உருவானது திருக்காளத்திப் புராணம். சிவப்பிரகாசர் இயற்றிய இருபத்துமூன்று நூல்களுள் புகழ்பெற்று நிற்பவை நால்வர் நான்மணிமாலையும் பிரபுலிங்க லீலையும் ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்டு நாற்பது பாடல்களால் அமைந்தது நால்வர் நான்மணிமாலை என்னும் சுவைமிகுந்த நூல்.

சிவப்பிரகாசர் அந்த நால்வரிடமும் கொண்ட பேரன்பு அந்த நூலில் புலனாகிறது. பாடல் ஒவ்வொன்றும் கற்பனை நயமும் பொருட் சிறப்பும் உடையதாய் விளங்குகிறது. பிரபுலிங்க லீலை என்பது வீரசைவ சமயத்தைச் சிறப்

பேராசிரியர் மு.வரதராசன்

பித்து எழுதப்பட்ட காப்பியம். சிவபெருமானின் அவதாரமாகிய அல்லமப்பிரபு என்பவரைத் தலைவராகக்கொண்டு அமைந்த அந்தக் காப்பியம், எல்லா நயமும் நிரம்பிக் கற்பவர்க்குச் சுவை மிக்கதாக உள்ளது. உவமையழகும் கற்பனைவளமும் நிரம்பிய காப்பியமாகத் திகழ்கிறது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் சிவப்பிரகாசரின் உள்ளம் மிகுதியான ஈடுபாடு கொண்டது. நால்வர் நான்மணி மாலையில் ஒரு பாட்டில் அவர் கூறுவது வருமாறு, " வேதங்களை ஓதினால், கண்களில் நீர் பெருக்கி நெஞ்சம் நெகிழ்ந்து உருகி நிற்பவர்களை யாம் கண்டதில்லை. ஆனால் திருவாசகத்தை ஒரு முறையே ஓதினாலும், கல் போன்ற மனதும் நெகிழ்ந்து உருக, கண்கள் மணல் கிணறு போல் சுரந்து நீர்பொழிய, உடம்பில், உரோமம் சிலிர்ப்பு அடைய, நடுக்கம் அடைந்து பக்தர் ஆகின்றவர்கள் தவிர வேறு வகையான வர்கள் இந்த உலிகில் இல்லை"



*வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி*
*நெஞ்சம்நெக்கு உருகிநிற்பவர்க் காண்கிலேம்*
*திருவாச கம்இங்கு ஒருகால் ஓதின்*
*கருங்கல் கரைந்துகக் கண்கள்*
*தெடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய*
*மெய்ம்மயிர் கொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி*
*அன்பர் ஆகுநர் அன்றி*
*மன்பதை உலகில் மற்றையர் இலரே.*

(தொடரும்)

---

## விநாயகபுரத்தில்
# இளம் குடும்பப் பெண் அடித்துப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை விநாயகபுரம் பிரதேசத்தில் வைத்து இளம் தமிழ் குடும்பப் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் நடைபெற்றுள்ளது.

கல்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை விநாயகபுரம் மருதநகர் பகுதியைச் சேர்ந்த பிள்ளையொன்றின் தாயான கமலேந்திரன் கோமதி (24 வயது) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

சம்பவத் தினம் இரவு இப்பெண் தனது பிள்ளையுடன் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருக்கும் வேளையில் இவ் வீட்டின் கதவினை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த இனம் தெரியாத நபர்கள் இப் பெண்ணை அடித்துக் கொலை செய்துவிட்டு தலைமறைவாகியிருந்தனர்.

இவரின் சடலம் நேற்று முன்தினம் காலையில் மீட்கப்பட்டு வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணையும் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-6)

# இராசையா துவாரகா கைது செய்யப்பட்டமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும்
## மாணவர் அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

பேராதனைப் பல்லைக்கழக கலைப் பிரிவு மாணவி இராசையா துவாரகா கைது செய்யப்பட்டமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டுமென மாணவர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் சிவில் உடை தரித்த நபர்களினால் இராசையா துவாரகா கைதுசெய்யப்பட்டிருந்தார்.

எனினும், இந்த கைது தொடர்பில் இது வரையில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு விடுக்கப்படவில்லை என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மனித உரிமைகளுக்கான மாணவர் அமைப்பு ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன. இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியன துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது என மாணவர் அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழ நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# தேரரின் கைப்பேசியை திருடியதால் மேலதிகமான சிறைத்தண்டனை

சீதுவை மூக்கலங்கமுவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் தலைமை தேரரின் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான செல்லிடத் தொலைபேசியைத் திருடிய குற்றத்தை ஏற்றுக்கொண்ட இரு நபர்களுக்கு நீர்கொழும்பு மேலதிக நீதவான் 10 வருட காலம் ஒத்தி வைக்கப்பட்ட 20 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

அத்துடன் பிரதிவாதிகளுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தார்.

அக்குரஸ்ஸ ஹேனகம பிரதேசத்தைச் சேர்ந்த இரு நபர்களுக்கே மேற்படி சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன.

சீதுவை பொலிஸார் தாக்கல் செய்த இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் கெமுனுபுர சாசனரத்ன தேரவார்.

பகல் அன்னதானத்திற்காக வழக்கின் முறைப்பாட்டாளரான தேரர் வந்த போது பிரதிவாதிகள் இருவரும் தேரரின் தொலைபேசியைத் திருடியுள்ளதாக வழக்கின் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளது. (2-6)

# 78 இலங்கையர்களையும் ஏற்றுக்கொள்ள சுவீடன் மறுப்பு

(கொழும்பு)

ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து வெளியேறிய 78 பேரை மீளத் தமது நாட்டில் குடியமர்த்துவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சுவீடன் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் அதிக அளவிலான சட்டவிரோதப் படகுகள் அவுஸ்திரேலியாவை அடைந்துள்ள நிலையில், அகதிகளின் எண்ணிக்கையும் கூடியுள்ள தாலேயே இந்த நிராகரிப்பு இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை 10 இலங்கைத் தமிழர்கள் அடங்கிய அகதிகள் குழு ஒன்று பிரிஸ்பேர்ண் கடற்பரப்பை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 12 வாரங்களுக்குள் குடியமர்த்தப்படுவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து, இந்தோனேசியாவில் தரையிறங்க ஓசியானிக் வைக்கிங் அகதிகள் சம்மதித்தனர்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் குடியமர்த்தல் ஒப்பந்தத்தில் உள்ள நாடு என்ற அடிப்படையில், சுவீடனில் அவர்களைக் குடியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அந்தக் கோரிக்கையை சுவீடன் அரசாங்கம் நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஜே.வி.பி.யும், புலிகளும் பயங்கரவாத அமைப்புகளே!

## ஜனாதிபதி மஹிந்த



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும், ஜே.வி. பியும் பயங்கரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்த அமைப்புக்களாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த இரண்டு அமைப்புக்களுமே ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட அமைப்புக்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரிமாளிகையில் காவல்துறை உத்தியோகத்தர்களை சந்தித்துக் கலந்துரையாடிய போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளும்,ஜே. வி.பியினரும் காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பயங்கரவாத தாக்குதல் களின் போது காவல்துறையினர் நாட்டைப் பாதுகாப்பதில் மேற்கொண்ட அரிய சேவை பாராட்டுக்குரியதென அவர் தெரிவித்துள்ளார்.

(ந-5)

# மலேசியாவில் ஏமாற்றப்படும் இலங்கையர்

## -சுஹாக்கம் ஆணையாளர் தகவல் -

(கொழும்பு)

வெளிநாட்டவர்களை மலோசியாவிற்குள் அழைத்து அங்கிருந்து வேறு நாடுகளுக்கு அனுப்புவதாக உறுதியளித்து பின்னர் ஏமாற்றும் நிலையங்கள் மலோசியாவில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை மலேசிய சுஹாக்கம் ஆணை யாளர் என். சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கையில் இருந்து இவ்வாறாக பலர் சட்ட விரோதமாக அழைத்து வரப்பட்டு ஏமாற்றப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ,அந்த நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக அழைத்துவரப்படும் அகதிகள் கனடா , அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளிக்கப்படுகின்றனர்.

எனினும் அவர்கள் அங்கு அழைத்துவரப்பட்டு ஏமாற்றப்படுவதாகவும் இவ்வாறு ஏமாற்றப்பட்ட இலங்கை அகதிகள் மலோசியாவில் உள்ள குடிவரவுத்திணைக்களம் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

(2-6)

# சமாதானத்தினால் மக்கள் பல்வேறு நன்மைகளை பெற்றுள்ளனர் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

சமாதானம் மக்களுக்கு பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ் தானிகர் பீட்டர் ஹெய்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மீன்பிடித் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதி மக்களும் சமாதானத்தினால் நன்மை அடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

# தனது அன்னதான மாளிகைக்கு சம்பந்தனின் வரவை எதிர்பார்க்கும் ஜனாதிபதி

## மு.கா. தலைவர் ஹக்கீம் சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகை இன்று அன்னதானசாலையாக மாறியுள்ளது. இந்த அன்னதானசாலைக்கு சம்பந்தன் வரு வாரோ மாட்டாரோ என்று ஜனாதிபதி வழி மேல் விழி வைத்து காத்துக்கொண்டிருக்கிறார். அப்படியொரு பெறுமதி இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்துள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை வரும் எம். பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்வாங்கப் பட்டுள்ள கிழக்கின் ஆயுதக் கும்பல்கள் அரசுக்கு ஆதரவாக இந்த ஜனாதி பதித் தேர்தலில் அட்டகாசம் புரிவதற்கு ஜெனரல் சரப்பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கும் பிரதான எதிர்க்கட்சிகளின் கூட்டு எவ்விதத்திலும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை மாலை புத்தளம் ஹூ தா பள்ளிவாசல் முற்றிலும் , புத்தளம் எரிக்களம் புட்டி ஜும்மா பள்ளியிலும் ஜனாதிபதித்தேர்தலில் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு அளிப்பதற்கான காரணங்களை வன்னிப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் புத்தளம் பகுதி மக்களுக்கும் விளக்கும் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இராணுவத்திலும் பொலிஸிலும் சேவையாற்றுபவர்கள் தமது கடமைகளை பாரபட்சமற்ற முறையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் அவர்களுடைய அந்தரங்கமான உத்தரவுகளுக்கு கட்டுப்படாமல் நேர்மையான முறையில் தேர்தல் பிரசாரங்களும் தேர்தலும் நடைபெறு வதை இவர்கள் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஜனாதிபதி மாளிகை ஒரு அன்னதானசாலையாக மாறியிருக்கிறது என்று சகலரும் பேசுகின்றனர். காலை , பகல் , இரவு என்ற வித்தியாசமின்றி ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் , அரச அதிகாரிகள், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள் என்று சகலரையும் அழைத்து அடிக்கடி கூட்டங்கள் அங்கு நடத்தப்படுகின்றன.

தேசத்துத்துரோகிகள் என்று புலிகளுக்கு வக்காளத்து வாங்குபவர்கள் என்றும் சேர் பூசிய அரசாங்கத்திற்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இப்போது சம்பந்தன் இந்த அன்னாதான சாலைக்கு வருவது மிக அவசியமாகிப்போயுள்ளது. மூன்று வேளையையும் நாள் தோறும் ஜனாதிபதித்தேர்தல் வரையும் உண்ணத்தருவார்கள்.

சரத்பொன்சேகாவை நாம் ஜனாதிபதி வேட்பாளராக நியமித்ததும் நடுக்கம்கொண்டிருக்கும் அரசாங்கமும் ஜனாதிபதியும் பாதாள கோஷ்டிகளைப் பயன்படுத்தி எம்மை பயமுறுத்தப்பார்க்கின்றனர்.

அச்சுறுத்திறுத்தியும் அடாவடித்தனம் செய்யும் ஜனாதிபதித்தேர்தலில் வென்றுவிடலாம் என்று மனப்பால் குடிக்கும் அவர்களது எண்ணங்கள் நாளாந்தம் தேய்வடைந்துகொண்டே போகின்றன. வேறு வழியில்லாத நிலையிலும் தொடர்ந்தும் பாதாள உலக கோஷ்டிகளின் தயவையே அரசு நாடி நிற்கிறது.

இன்று வடகிழக்கில் ஏற்பட்டிருக்கும் உணர்வலைகளும் எண்ண வெளிப்பாடுகளும் இந்த ஆட்சியை மாற்றியே ஆக வேண்டும் என்ற கருத்தையே வெளிப்படுத்துகின்றன. தேர்தல்களில் வாக்களித்து தமக்கு எதுவும் நடக்கப்போவதில்லை என்பது மூளையில் முடங்கிக்கிடந்தவர்கள் இன்று எமது தீர்மானிக்கும் சக்தி எமது கைகளில் வந்து விட்டது என்று மகிழ்ச்சியடையும் நிலைமையை ஜெனரல் சரத்பொன் சேகாவின் வருகை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியல் என்பது சாத்தியமானவற்றை சாதிக்கின்ற கலை. ஜனாதிபதித்தேர்தல் ஒன்று வந்தால் மூலையில் முடங்கிக்கிடங்க வேண்டிய கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் இருக்க முடியாது என்று அவர் மேலும் கூறினார். (2-6)


sri lanka

இலங்கை

உல்லாசப் பயண நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்

ஒரே இடத்திலே சேவைகள் வழங்கல் .......

இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகார சபையின் தரமான சேவையினை உறுதிப்படுத்தும் பிரிவினாலே நடத்தப்படும் நடமாடும் சேவை :

மிலேனியம் றெஸ்ட்

இல. 70, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்

2009 மார்கழி 16, 17,18 ஆம் திகதிகளில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.4.00 மணி வரை நடத்தப்படவுள்ளது.

தொலைபேசி இல. 021 222 5876

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து உத்தரவு பெற்றவர்களை யும் இந்த சேவையைப் பயன்படுத்தி 2010 ஆம் ஆண்டிற்கான சிபாரிசுகளை இந்தச் சேவையின் போது பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைத்து தேசிய வாகன சாரதிகள் மற்றும் சுற்றுலா இடங்கள் பற்றிய வழிகாட்டி, விளக்கம் தருவோர் ஆகியோரும் தங்கள் அனுமதிப்பத்திரங்களை இந்தச் சேவையின் பொழுது புதுப்பித்துக் கொள்ளலாம்.

இந்தக் காலப்பகுதியிலே சிறிய மற்றும் நடுத்தர உல்லாச பயணத்துறை ஸ்தாபனங்களையும் ஒன்றிணைப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

*தலைவர்,*
*இலங்கை உல்லாசப் பயணத்துறை,*
*அபிவிருத்தி அதிகார சபை,*
*இல.80 , காலி வீதி, கொழும்பு.*

*மேலதிக விபரங்களுக்கு: தொலைபேசி இலக்கம் 2437057/2437954*
*உல்லாசப் பயணத்துறை அமைச்சு*

(4155)



விவாத அரங்கு-02

யாழ்.குடாநாட்டின் வீதிகளை விஸ்தரிப்பது

உடனடி அவசியம் | அவசியமில்லை

தீர்ப்பு : 16.12.2009

விவாத அரங்கு -03

மாணவர்களின் கல்வி முன்னேற யாழ். குடாநட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்

இணைக்க வேண்டும் | இணைக்கக்கூடாது

*விவாதம் திங்கள் 21.12.2009 ஆரம்பம்*

## என்.டி.ராமராவ் மனைவி கைது

ஆந்திராவை பிரிக்க எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருக்க முயன்ற ஆந்திர முன்னாள் முதல்வர் என்.டி.ராமராவின் மனைவி கைது செய்யப்பட்டார். ஆந்திராவை பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லஷ்மி பார்வதி கோஷங்கள் எழுப்பினார். மேலும் தற்போதைய அரசியல் நிலைமைக்கு காங்கிரஸ் மற்றும் தெலுங்கு தேசம் கட்சிகளே காரணம் என்று கூறினார். மேலும் பார்வதியுடன் உண்ணாவிரதம் இருக்க முயன்ற அவரது ஆய்வாளர்களையும் பொலிஸார் கைது செய்தனர். (2-6)

### தெலுங்கானா விவகாரத்தில் புதிய திருப்பம்

# ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சி? ரோசய்யாவின் பதவிக்கு ஆப்பு

தெலுங்கானா தனி மாநில விவகாரத்தில் அடுத்தடுத்து திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. முதல் மந்திரி ரோசய்யாவை பதவி விலக வைத்து சட்ட சபையை முடக்கி ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த காங்கிரஸ் மேலிடம் பரிசீலித்து வருகின்றது.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக் கோரி தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவர் கே.சந்திரசேகரராவ் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். இதனால் தனி மாநிலக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

இதை எதிர்த்து தெலுங்கானா தவிர ஆந்திராவின் மற்ற பகுதிகளான கடலோர ஆந்திரா ராயலசீமா பகுதிகளில் அரசியல் கட்சியினரும் மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளமை தெரிந்ததே.

இதற்கமைவாக தெலுங்கானாவை எதிர்த்து காங்கிரஸ் தெலுங்கு தேசம், பிரஜா ராஜ்யம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 138 எம்.எல்.ஏக்களும், 5 எம்.பிக்களும் பதவி விலகினர். அந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள், 22 மந்திரிகள் பதவி விலகப் போவதாக அறிவித்தனர். அவர்களை முதல் -மந்திரி ரோசய்யா சமாதானப்படுத்தினார். பதவி விலகல் முடிவு குறித்து நேற்று முன்தினம் அந்த மந்திரிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

மந்திரிகள் அவ்வாறு செய்தால், தானும் பதவி விலகப் போவதாக முதல் -மந்திரி ரோசய்யா கூறியதாகத் தெரிகிறது. மேலும், தெலுங்கானாவுக்கு எதிராக ஆந்திராவில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலை குறித்து காங்கிரஸ் மேலிடத்துக்கு ரோசய்யா தகவல் தெரிவித்துள்ளார். மேலிடத்தின் உத்தரவுக்காக அவர் காத்திருக்கிறார்.

இந்தப் பிரச்சினை குறித்து காங்கிரஸ் மேலிடம் ஓரிரு நாளில் முக்கிய முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலைமையை சமாளிக்க, முதல் -மந்திரி ரோசய்யா பதவி விலக மேலிடம் உத்தரவிடும் என்று தெரிகிறது. பிறகு மாநில சட்டசபையை முடக்கி வைத்து, ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஜனாதிபதி ஆட்சி முடிவு குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவர் கூறியதாவது. இது பிராந்திய உணர்வுள்ள பிரச்சினை என்பதால், ரோசய்யாவை நீக்கிவிட்டு மற்றொருவரை முதல் -மந்திரியாக நியமிக்க காங்கிரஸ் மேலிடம் விரும்பவில்லை. சட்ட சபையை கலைத்து விட்டால் புதிதாகத் தேர்தலை சந்திக்கவேண்டியிருக்கும். அதற்கு மேலிடம் தயாராகவில்லை.

ஆகவே சட்டசபையை வைகோ ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தினால் நிலைமை சீராகும்போது மீண்டும் சட்டசபைக்கு உயிரூட்டி மீண்டும்அரசை அமைத்துக்கொள்ளலாம் என்று மேலிடம் கணக்குப்போடுகிறது என்றார். (6)


## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் பொது அறிவித்தல் -2010

**01. பட வரைஞராகப் பதிவுசெய்தல் -2010**

2010 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2010 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளவும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் -2010**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2010 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2009 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நல்லூர் /கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.01.2010 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கெள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு -268 இன் பிரகாரமான அறிவித்தல்.**

**3.1** நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசவடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதனை அறியத்தருகின்றேன். எனவே, நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

**3.2** ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

**3.3** அனுமதிபெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள், கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கரவண்டி. மிருகங்களின் உரிமம் பெறல்.**

2010 ஆம்ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**05. நல்லூர் /கொக்குவில் உப அலுவலக ஆதனவரி அறிவித்தல் -2010**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்தவரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின், வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2010 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உபஅலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலை வரி பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில், 1533/16 இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2010 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் நல்லூர்/ கொக்குவில் உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை,<br>
கொக்குவில் கிழக்கு.<br>
10.12.2009.

மேரிபோசப் சாந்தசீலன்,<br>
செயலாளர்,<br>
நல்லூர் பிரதேச சபை.

(C-3929)


# இலங்கை தமிழர் உரிமைக்காக இராமேஸ்வரத்தில் ஞானவேள்வி

## இலங்கை அகதிகள் பலர் பங்கேற்றனர்

(இராமேஸ்வரம்)

இலங்கைத் தமிழர் சகல உரிமையும் பெற்று வாழ இந்து மக்கள் கட்சி சார்பில் இராமேஸ்வரத்தில் ஞான வேள்வி நடந்தது. இராமேஸ்வரம் சன்னதி தெருவில் நேற்று முன்தினம் இந்து மக்கள் கட்சி சார்பில் தமிழ் திருமுறை ஞான வேள்வி நடத்தப்பட்டது.



அத்தோடு தமிழக மீனவர் வாழ்வுரிமை காக்கவும் கச்சதீவு மீட்கப்பட்டு இந்தியா வல்லரசு ஆகவும் வேண்டி நடத்தப்பட்ட இந்த வேள்விக்கு கோவை கங்காதர தேசிகர் சுவாமிகள் தலைமை வகித்து தொடக்கிவைத்தார். விநாயகர் வழிபாட்டை தொடர்ந்து திருவிளக்கு வழிபாடு, நடராஜருக்கு சிறப்புப்பூஜை செய்யப்பட்டது.

தொடர்ந்து திருமுறை இன்னிசையுடன் மகேஸ்வர பூஜைசெய்து வேள்வி நடந்தது. காமாட்சிபுர ஆதீனம் சிவலிங்கேசுர சுவாமிகள், பிள்ளையார்மடம் பொன் மணிவாசகர் அடிகளார், நாகதிபீடம் சிவசண்முகசுந்தர சுவாமிகள், கச்சியப்பர் மடாலயம் சடாட்சர வேல் சுவாமிகள், காளிதாஸ் சுவாமிகள், இந்து மக்கள் கட்சி மாநில தலைவர் அர்ஜுன்சம்பந்த உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் இலங்கை அகதிகள் பலர் பங்கேற்றனர். (ஓ-6)

### கடலில் பிடிபட்ட

# இலங்கை தமிழர்களிடம் ஆந்திராவில் விசாரணை

(ஆந்திரா)

ஆந்திரமாநிலம் நிஜாம்பட்டினம் கடல் பகுதியில் இந்தியக் கடலோரக்காவல் படையினர் கப்பலில் ரோந்து சென்றுகொண்டிருந்த போது 6 படகுகள் அத்துமீறி வந்து கொண்டிருப்பதைக் கண்டனர். அந்தப் படகுகளை வழிமறித்து நிறுத்தினர்.

இலங்கையைச் சேர்ந்த அப்படகுகளில் மொத்தம் 34 இலங்கைத் தமிழர்கள் இருந்தனர். கடலோரக் காவல் படையினர், அவர்களை படகுகளுடன் சேர்த்து காக்கிநாடா துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர்.

அங்கு படகுகளை பறிமுதல் செய்த அவர்கள், இலங்கைத் தமிழர்களை கடலோரக் காவல் படைக் கப்பலிலேயே சிறைவைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிடிபட்ட தமிழர்கள் மீது வழக்குப் பதிவு செய்து மேல் விசாரணை நடத்துவதற்காக, இன்னும் பொலிஸில் ஒப்படைக்கவில்லை. துறைமுகத்தைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (6-2)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 5 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண் 5, விதி எண் 7 ஆகக் கொண்டவர்கள் புதன், கேது ஆகியோரின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்களாக இருப்பர். இவர்களைப் பார்க்கும் போதே பிறர் மனத்தில் மதிப்பும், மரியாதையும் குடிகொள்ளும். அந்த அளவு கண்ணியம் மிகுந்த தோற்றமுள்ளவர்களாக இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் எளிமையானவர்களாக இருப்பர். எளிமையான ஆடைகளையே அணிவர். ஆனால் தூய்மையாக இருப்பர். எப்போதும் சுறுசுறுப்புடன் காணப்படுவர்.

இவர்கள் வெளிப்பார்வைக்கு துணிச்சல் மிகுந்தவர்களாக இருப்பர். ஆனால் உள்ளுக்குள் கோழைகளாக இருப்பர். வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

தம் மனத்திலுள்ளதைக்கூட வெளியில் சொல்லமாட்டார்கள். எத்தனை வேதனை தமக்கு இருந்த போதிலும் தம்முள்ளேயே குமுறிக் கொண்டிருப்பர்.

இவர்கள் பலருடன் நட்பு கொண்டாலும் அவர்களிடம் அதிகமான இணக்கம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் சட்டென்று கோபத்துக்கு ஆளாவர். இவர்களின் கோபம் பிறரை அஞ்சி நடுங்கச் செய்யும். அதனாலும் பலர் இவர்களிடம் நெருங்கப் பயப்படுவர்.

இவர்கள் உண்மைக்கு உறைவிடமானவர். நேர்மையில்லாத செயல்களில் ஈடுபட மாட்டார்கள். கடவுள் பக்தி கொண்டவர். புனிதப் பயணம் பல மேற்கொள்வர். இவர்களின் வேதாந்தப் பேச்சு பிறர் வெறுப்புக்கு இடமளிக்கும்.

ஈவு இரக்கம் கொண்டவர்கள். பிறருக்கு மனமுவந்து உதவக்கூடியவர்கள். சமுதாயத்தில் ஓர் அந்தஸ்து பெற்றுத் திகழ்வர்.

தான் செய்யும் சிறு தவறையும் நினைத்து தன்னைத்தானே நொந்து கொள்ளும் சுபாவம் இவர்களிடமுண்டு.

### குடும்ப வாழ்க்கை

இவர்கள் தம்மையும் வீட்டையும் தூய்மையாகவும் அழகுபடவும் வைத்துக் கொள்வர். இவர்களுக்கு ஏற்றாற் போல வாழ்க்கைத் துணையும் அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அமைதி நிலவும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கலைஞானமிக்கவர்கள். பாடலாசிரியராகவும், இசை, சங்கீதம் நாட்டியத்துறையில் தேர்ச்சி பெற்றவராகவும் இருப்பர். அது தொடர்பான எழுத்து பேச்சுத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடும். சமயத்திலும், சட்டத் துறையிலும் கூட ஈடுபட்டிருக்கலாம். விவசாயம் போன்ற துறையிலும், இரும்பு எந்திரச் சாமான்கள், வண்டி வாகனங்கள் போன்ற துறைகளில் பணியும் அதனால் வருமானமும் பெறக்கூடும்.

இவர்கள் அதிகமாக சம்பாதித்து சொத்து சேர்க்கும் வாய்ப்பை பெறக்கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு மனக்கோளாறு மற்றும் வாய்வு சம்பந்த நோய்களும் ஏற்படும். இவை தவிர கண், காது தொடர்பிலான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் 5,6 தொடர்பிலான புதன், சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற எண்களில் யோகமான ஒன்றில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 5,6 தொடர்பிலேயே பெயர் வைக்க யோகமாகும்.

இவர்களுக்கு 5,2,6 யோகமான எண்களும் அது தொடர்பான திகதிகளும் யோகமானவை.

ஆனால் செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 8 அது தொடர்பான எண்களும் திகதிகளும் விலக்கத்தக்கவை.

## உடல் எண் : 5 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 5, விதி எண் 8 ஆகக் கொண்டவர்கள் புதன், சனி இருவரின் ஆதிக்கத்திற்குட்பட்டவ்ராகக் கருதப்படுவர். இவர்கள் நடுத்தர உயரமானவர்களாக இருப்பர். கண்கள் சிவந்து காணப்படும்.

### மன, குணவியல்பு

இவர்கள் இயற்கைக் காட்சிகளையும், நவீனப் பொருட்களையும் கண்டு ரசிக்கும் ஆர்வமுள்ளவர்களாக இருப்பர். அதனை ரசிப்பதோடு விடமாட்டார்கள். ஏன் எப்படி என்று அதைப்பற்றி நுணுக்கமாக ஆராயும் தன்மையுள்ளவர்களாக இருப்பர். மனவலிமையுள்ளவர்கள்.

இவர்கள் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் முழு கவனத்துடன் செயலாற்றுவர். வேறு எதிலும் கவனம் செலுத்தமாட்டார்கள். உணவு, உறக்கத்தைப் பற்றிக் கூட அக்கறை காட்ட மாட்டார்கள்.

அதேச சமயம் இவர்களது மனம் கொஞ்சம் சலித்தால் போதும், வேலை எதுவும் செய்யாமல் சும்மா காலங்கழிப்பர்.

இவர்களிடம் ஆடம்பரமான பேச்சு இருக்காது. தங்களால் முடியாத காரியத்தை முடியும் என்று கூற மாட்டார்கள். பிறருக்கு உதவும் தாராளமனம் இவர்களிடம் உண்டு. முடிந்த அளவு உதவி செய்வர். பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்கவோ பிறரை ஏமாற்றவோ செய்யமாட்டார்கள். அதனால் பிறரிடம் நன்மதிப்பு பெற்றுத் திகழ்வர்.

இவர்களுக்கு தெரியாத கெட்ட பழக்கங்களே இல்லையென்று கூறலாம். ஆனால் ஒன்றையும் விடாப்பிடியாகப் பிடித்து வைத்திருக்க மாட்டார்கள்.

இவர்கள் பல ஊர் சுற்ற ஆர்வமுள்ளவர்களாக இருப்பர். வாழ்க்கையில் முன்னேற எத்தனை கஷ்டங்களையும் ஏற்கத் தயாராக இருப்பர். கடவுள் பக்தி மிகுந்தவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் இருந்த வண்ணமிருக்கும். இருப்பினும் இவர்கள் வாழ்க்கை ஓர் உன்னத நிலை அடைய பெரு முயற்சியெடுத்து வெற்றியும் பெறக்கூடும்.

### தொழிலும் வருமானமும்

இவர்களை எந்திர மனிதர்கள் என்று கூறலாம். இவர்கள் இயக்கிவிட்ட எந்திரங்களைப் போன்று அயராது பாடுபட்டுக் கொண்டே இருப்பர். சில சமயம் பழுதுபட்ட எந்திரம் போல செயலாற்றவும் போவர்.

இருந்தாலும் இவர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களாக இருந்தாலும் சொந்தத் தொழிலும் நாட்டம் கொண்டு வருமானத்தைப் பெருக்கும் வழியைத் தேடுவர்.

இவர்கள் பல சாஸ்திரங்களைக் கற்றவர்களாகவும், கலைத்துறையில் நாட்டமுள்ளவர்களாகவும் இருப்பர். கணிதம், ஜோதிடம், சட்டம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டிருப்பர்.

இவை தவிர இரும்பு மற்றும் உலோகங்கள் மின்சாரம், வண்டி வாகனம் சம்பந்தமான தொழில்களில் இவர்கள் உயர்வு பெறுவர். அத்துறையில் ஏஜெண்டுகளாகவும் இருக்கக்கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதிப்பாட்டால் மூலம், இரத்தக் கொதிப்பு, வயிற்றுவலி, கண்நோய் போன்றன உண்டாகும். இவை தவிர முதுகுவலி, காது சம்பந்தமான நோய்களும் ஏற்படக்கூடும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்களுக்கு புதன், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 5,6 அது தொடர்புடையனவற்றில் யோகமான பலன்கள் தரவல்ல எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக்கூட 5,6 தொடர்புடைய பெயர்களே அதிர்ஷ்டமானவை.

இவர்களுக்கு 5,6 தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகப் பலன்களைத் தரவல்லவை.

இவர்களுக்கு பெருமளவு கெடுதல் அளிக்கவல்ல எண்களும், திகதிகளும் இல்லையெனக் கூறலாம்.

(தொடரும்)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவரை தேர்தலில் நிறுத்தாமை தேர்தல்களை புறக்கணிப்பதற்கு நிகரானதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் நிலைப்பாடு இதுவரையில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் தேர்தல்களை புறக்கணித்தமைக்கு நிகரானதொரு நிலைமை இந்த தடவையும் ஏற்படக்கூடுமென எச்சரிக்கை விடுத்துள்ள அவர் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர் மீதும் காணப்படும் அதிருப்தியை சரியான முறையில் வெளிப்படுத்த தமிழ் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டியது இன்றியமையாததென குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த வாரத்தின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

எவ்வாறெனினும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக இரகசிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-2)

## பிரதான வேட்பாளர்களின் சொத்து விபரங்களை சமர்ப்பிக்க ஏற்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் சொத்து விபரங்களை வேட்பு மனுதாக்கல் செய்யும் தினத்திலேயே சமர்ப்பிப்பதற்கு இரண்டு தரப்புக்களும் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் தனது சொத்துக்கள் தொடர்பிலான விபரங்களை தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது சம்பிரதாயமாகும். அந்த வகையிலேயே இந்த விபரங்கள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. (6)

# இலங்கையில் எரிபொருள் நிரப்புவதற்காகவே வடகொரிய விமானம் தரையிறக்கப்படவிருந்தது

## லங்கா தீப செய்தி

(கொழும்பு)

தாய்லாந்தில் தரையிறக்கப்பட்ட வடகொரிய விமானம் இலங்கையில் எரிபொருள் நிரப்புவதற்கு திட்டமிட்டிருந்ததாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விமான உதிரிப்பாகங்களை ஏற்றிச் செல்வதாக தெரிவித்து குறித்த விமானம் இலங்கையில் தரையிறக்கப்படவிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. எவ்வாறெனினும் திடீரென தாய்லாந்தில் தரையிறக்கப்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் குறித்த விமானம் பாகிஸ்தானை நோக்கி ஆயுதங்களை எடுத்துச் சென்றிருக்கலாம் என குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்றதாக வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (6-2)




தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்தினால் கிராமங்கள் தோறும் மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக மரக்கன்று வழங்கும் நிகழ்வில் யாழ்/கச்சாய் அரசினர் பாடசாலை அதிபருக்கு கழக தலைவர் லயன் இ. கந்தையா ஒரு தொகுதி மரக்கன்றுகளை வழங்குவதையும் அருகில் லயன்ஸ் கழக உறுப்பினர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

# 15-12-2009 முதல் 21-11-2010 வரை

## கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)

**கட்டளையிட்டால் செய்ய காத்திருக்கும் பலரை கையில் வைத்திருக்கும் கடக ராசி நேயர்களே!**

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி! வளர்ச்சி தரும் விதத்தில் அது அமையுமா? என்ற சிந்தனை உங்களுக்கு உருவாகலாம். ஏனென்றால் சிந்திக்க வைக்கும் ஆற்றலைத் தரும் சந்திரன் உங்களுக்கு ராசிநாதன் அல்லவா? "கலியுகத்திற்கு கடக ராசி" என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

இங்ஙனம், சிறப்பு வாய்ந்த ராசியில் பிறந்த உங்களுக்கு குருவின் அருளும் இருந்தால் கொடிகட்டி பறக்கலாம் அல்லவா? அப்படிப்பட்ட குரு உங்கள் ராசிக்கு எட்டில் அல்லவா சஞ்சரிக்கப் போகிறது? எட்டில் குரு வந்தால் எண்ணற்ற மாற்றம் வரும் என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே உங்களுக்கு அனுகூலம் தரும் யோகபலம் பெற்ற நாளில் குருவிற்கு உரிய ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைத்து அர்ச்சனை, அபிஷேகம், செய்து வழிபட்டு வருவதன் மூலமும், பூசம் நட்சத்திரமன்று நடைபெறும் குருப் பெயர்ச்சி யாகங்களில் கலந்து கொள்வதன் மூலமும் பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

குரு வாரத்தில் விரதமிருப்பதன் மூலமும், குருவிற்கு உரிய வழிபாடுகளில் தேவையான பொருட்களை வழங்குவதன் மூலமும் மிகுந்த நன்மைகளை நீங்கள் அடையலாம். உங்கள் ராசிக்கு 6,9-க்கு அதிபதியான குருபகவான் 8 ஆம் இடத்தில் சஞ்சரித்தாலும், அதன் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிந்து புனிதமடைய வைக்கிறது.

ஒன்பதுக்கு அதிபதியின் பார்வை பொன், பொருட்களை வழங்கும் என்பது நியதி. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்தால் உங்களுக்கு பலன் அதிகம் கிடைக்கப் போகிறது.

### பொது நலத்தில் ஈடுபட்டு புகழ் குவிப்பவர்கள்!

விதியை வெல்லும் மதியைப் பெற்றவர்கள் நீங்கள்! வீட்டுக்கு நன்மை செய்ய விரும்புபவர்கள் பலர் உண்டு. ஆனால், உங்களைப் பொறுத்த வரை நாட்டுக்கு நன்மை செய்ய விரும்புபவர்களாக இருப்பீர்கள்.

உங்களுக்கு பிடிவாத குணம் மட்டும் இல்லாவிட்டால், பிறரை அனுசரித்துச் செல்கின்ற ஆற்றலையும் வரவழைத்து கொண்டால் நொடிப்பொழுதில் உங்களுக்கு முன்னேற்றம் வந்து சேரும். ஆன்மீகம் முதல் அரசியல் வரை அத்துபடியாக இருந்தாலும் உங்களுக்கு என்று பிரச்சினைகள் வரும் பொழுது உள்ளூர ஒரு பயம் வந்து சேரும்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களையெல்லாம் வழங்கப் போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

உங்கள் ராசிக்கு ஆறாம் இடத்திற்கும், ஒன்பதாம் இடத்திற்கும் குரு அதிபதியாவார். 6க்கு அதிபதி எட்டில் வரும் பொழுது விபரீத ராஜ யோகம் செயல்படுகிறது. அதே நேரத்தில் 1க்கு அதிபதியாகவும் குரு வருவதால் அது அவ்வளவு நல்லதல்ல. திடீர் மாற்றங்களைக் கொடுக்குமல்லவா?

குருப்பெயர்ச்சியானவுடன் அதாவது, 15.12.2009 முதல் 4.5.2010 வரை மீண்டும் 8.11.2010 முதல் 21.11.2010 வரை கும்பத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது அதன் பார்வை, குடும்ப ஸ்தானம், வாக்கு ஸ்தானம், சுக ஸ்தானம், வாகன ஸ்தானம், தாய் ஸ்தானம், பயண ஸ்தானம், விரய ஸ்தானம் என வர்ணிக்கப்படும் இடங்களில் எல்லாம் பார்வை பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.

இடையில் அதிச்சாரமாக 05.05.2010 முதல் 7.11.2010 வரை மீன ராசியில் சஞ்சரித்து அங்கேயே வக்ரம் அடைந்தும் சில நாட்கள் சஞ்சரிக்கிறார். வக்ர காலத்தில் வளர்ச்சி ஏற்பட சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து முறையாக தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை ஜென்ம ராசியிலும், சகோதர சகாய ஸ்தானம், புத்திர பாக்கிய ஸ்தானம் எனப்படும் 1,3,5 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

எனவே அதன் பலனை நீங்கள் முழுமையாகப் பெறப் போகிறீர்கள். ஆச்சரியப்படும் விதத்தில் உங்கள் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுக்கும் இந்த குரு எட்டில் சஞ்சரிக்கப் போகிறார்.

*"எட்டில் குரு வந்தால் இடமாற்றம் உருவாகும்! விட்டுக் கொடுப்பதனால், வெற்றி வந்து சேர்ந்துவிடும்! பெட்டி பணம் அனைத்தும், பெரிதும் செலவாகும்! பற்றோடு குருவதனை பணிந்தால் நலம் சேரும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் எட்டில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்களுக்கு எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கலாம்.

குறிப்பாக, இடமாற்றம், ஊர்மாற்றங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் கூட இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம். தொழில் பங்குதாரர்கள் தனித்தியங்க முற்படுவர். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வர விட்டுக் கொடுத்துச் செல்வது தான் நல்லவழி.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!

குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடும். பண வரவுகள் அதிகரிக்கும். உதவிக்கரம் நீட்ட பலரும் முன்வருவர். உடல்நலம் சீராகும். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். தங்களை மற்றவர்கள் மதிக்கவில்லையே என்ற ஆதங்கம் தீரும். கொடிகட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தர்கள் மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றப்படுவர். அதில் தான் தனலாபமும் கிடைக்கும்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு நான்காமிடத்தில் பதிவதால், தாயின் உடல் நலம் சீராகும். நோயின் காரணமாக பாயில் படுத்த தாய் இனி பம்பரமாக பணிபுரிவார். விலங்கு வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்குவதில் ஈடுபாடு அதிகரிக்கும். பாதியில் நின்ற கட்டிடப்பணி இனி மீதியும் தொடரும்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். பயணங்களால் நன்மைகள் உருவாகும். தூரதேசத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரலாம். கடன் சுமை குறையும். குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சுயஜாதகத்தில் குரு இருக்கும் பாதசார பலமறிந்து பரிகாரங்களை மேற்கொண்டால், அரிய வாய்ப்புகள் வந்து சேரும். அதிசயிக்கத்தக்க விதத்தில் வாழ்க்கையும் அமையும்.

### மீன குரு பார்வையில் ஏற்படும் பலன்கள்!

உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடமான மீன ராசியில் மே - 5 ஆம் திகதி முதல் நவம்பர் 7 ஆம் திகதி வரை குரு சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, அதன் பார்வை 1,3,5 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் மாறும். உடன் பிறப்புகள் முதல் உடனிருப்பவர்கள் வரை உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன் சுமை குறையும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

இடம் மாறுவோமா? என்ற சிந்தனைக்கு முற்றுப் புள்ளியும் வைப்பீர்கள். முடிவும் எடுப்பீர்கள். ஆரோக்கியத்திற்காக செலவிட்ட தொகை குறையும். பகை மாறி பாசம் அதிகரிக்கும்.

குருவின் பார்வை மூன்றாமிடத்தில் பதிவதால் முன்னேற்றங்கள் வந்து சேரும். மூடிக் கிடந்த தொழிலை திறப்பு விழா செய்து செல்வ நிலையை உயர்த்திக் கொள்வீர்கள். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கௌரவமும், புகழ் கூடும். சகோதர வழிச் சச்சரவுகள் தீரும்.

குருவின் பார்வை ஐந்தாமிடத்தில் பதிவதால் கடந்த காலங்கள் வசந்த காலங்களாக மாறும். இழந்தவைகளை ஈடுகட்டும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் கல்வி - முன்னேற்றம் க்ருதி, கடல் தாண்டும் முயற்சிக்கு வழிவகுத்துக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகல, பிரபலஸ்தர்கள் பின்னணியாக இருப்பர். வங்கிச் சேமிப்பு உயரும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம் (16.07.2010 முதல் 7.11.2010 வரை)

உங்கள் ராசிக்கு 6க்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறுவது நன்மைதான். இருப்பினும் 9க்கு அதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தந்தையுடன் கருத்து வேறுபாடுகளும், தனயனுடன் பிரச்சினைகளும் உருவாகலாம். எனவே, அனுசரித்துச் சென்றால் தான் இக்காலத்தில் ஆதாயத்தை பெறலாம். அரசு வழி அனுகூலம் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம்.

சங்கிலித் தொடர் போல கடன் சுமை கூடாதிருக்க இக்காலத்தில் விதியை மாற்றும் ஸ்தலங்களுக்கு சென்று வருவது நல்லது.

அஷ்டமத்துக் குருவால் இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு அதிகச் செலவுகள்

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

உருவாகலாம். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி சுபவிரயமாக்கி கொள்ளலாம். வி.ஆர்.எஸ். வாங்கும் அமைப்பை உத்தியோகத்திலுள்ள பெண்கள் மேற்கொள்வர்.

ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சுயஜாதகத்தின்படி பாக்கியங்களை வழங்கும் தெய்வத்தை வழிபட்டால் சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கத்தால், ஏற்படும் தடைகள் அகலவும், தக்க விதத்தில் தனலாபம் குவியவும், நந்தீஸ்வரரை வழிபட்டு வருவதோடு, செல்வநிலையை உயர்த்தும் தெட்சிணாமூர்த்தியையும் வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் உடனடி அபிவிருத்தி திட்டம்

## சுகாதார அமைச்சு முன்னெடுப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி வைத்தியசாலையை உடனடித் திட்டமொன்றின்மூலம் மீண்டும் அபிவிருத்தி செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி சென்றிருந்தார்.

யுத்த சமயத்தில் இவ்வைத்தியசாலைக் கட்டிடம் தவிர அனைத்து வசதிகளும் அழிக்கப்பட்டிருந்தன.

இதற்கமைவாக ஒருவார காலத்துக்குள் இவ் வைத்தியசாலைக்குத் தேவையான கட்டில்களைப் பெற்றுக் கொடுக்குமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

அத்தோடு ஈ.சி.ஜி. எக்ஸ் கதிர் இயந்திரம் உட்பட சத்திர சிகிச்சைக்கான உபகரணங்களையும் உடனடியாக இவ் வைத்தியசாலைக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக உடனடியாக பத்து இலட்சம் ரூபாவைச் செலவிடத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு கூறுகிறது.

மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியை அண்டிய பகுதிகளில் குடியேறியுள்ள 30 ஆயிரம் மக்களுக்கு சுகாதார வசதியை வழங்குவதற்காகவே இந்த அபிவிருத்தித் திட்டம் உடனடியாக முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (6-2)

# தமிழ்க்கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும்

## அமைச்சர் ராஜித கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை காண்பதாக தெரிவித்துள்ள எமது அரசாங்கத்துக்கு கூட்டமைப்பின் ஆதரவு பக்கபலமாக அமையும் என்று நிர்மாண மற்றும் பொறியியல்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் நிலைமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத்தை தோற்கடித்துள்ள ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இடம்பெயர்ந்துள்ள மக்களை விரைவாக மீள் குடியேற்றி வருகின்றது. மேலும் குடியேறும் மக்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுத்து வருகின்றது.

இதேவேளை வடக்கை மிக வேகமாக எமது அரசாங்கம் அபிவிருத்தி செய்து வருகின்றது. இந்நிலைமையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

எமது அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம் வடக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காட்ட முடியும். மேலும் அபிவிருத்திப் பணிகளில் ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கவும் முடியும். (6)





யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் தின நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் வெற்றிபெற்ற மாணவனுக்கு சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத தில்லைநடராஜப் பெருமாள் கோயிலில் நாளை புதன்கிழமை முற்பகல் 7 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை திருவாசக முற்றோதல் நடைபெற வுள்ளது.

இத் தெய்வீக நிகழ்வில் அடியவர்கள் அனைவரையும் ஆசார சீலர்களாக வருகை தருமாறு இந்துசமய பேரவை கேட்டுக் கொள் கின்றது. (6-4)

## அங்குரார்ப்பண பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சங்க அங்குரார்ப் பணப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்வி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச்சங்கத்தில் இணைவதற்காக முற்கூட் டியே தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள் ளோரும், புதிதாக இணைய விரும்பும் ஆசிரி யர்களும் தவறாது கலந்துகொண்டு தமக் கான உறுப்புரிமைப் படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் இக்கூட்டத் திற்கு சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளதுடன் இதில் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள் ளனர்.

தொடர்ந்து ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கோவைப்படுத்தும் பணி களும் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (6-9)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சபை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட சங்க மத்தி யஸ்தர் சபை பரீட்சை எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் கொழும்பு றொறிங்ரன் விளை யாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவரையும் இச் செயன்முறை பரீட்சை யில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திருமதி எஸ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (6-4)

## கீரிமலைக்கான பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலி ருந்து கீரிமலைக்கான நேரடி பஸ் சேவை இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட வுள்ளது.

பிரயாணம் செய்ய விரும்பும் அடியார்கள் இன்று காலை 9மணிக்கு யாழ்.பேருந்து நிலையத்திற்கு தங்களுடைய தேசிய அடை யாள அட்டையுடன் பிரசன்னமாக இருக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கீரிமலைக்குச் செல்லும் பேருந்து புனித தீர்த்தக்கரை, நகுலேஸ்வர ஆலயம் ஆகிய இடங்களுக்கும் செல்வதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. (6)

# மாதகல் பிரதேச மக்களின் பிரச்சினைகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பிரதேச பொது அமைப்புக்களின் அழைப்பினை ஏற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் மாதகல் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

மாதகல் புனித தோமையார் தேவாலய வளாகத்தைச் சென்றடைந்த அமைச்சரை மாதகல் பிரதேச அனைத்துப் பொது அமைப் புக்களின் பிரதிநிதிககளும் பொதுமக்களும் வரவேற்றனர்.

இதனையடுத்து பொதுக்கூட்டம் மாதகல் பங்குத்தந்தை அருட்திரு. ஆனந்த குமார் அடிகளார் தலைமையில் இடம்பெற் றது.

இதில் வரவேற்புரையினை பிரதேச கிராம உத்தியோகத்தர் ஞானாநந்தன் நிகழ்த்தினார். வரவேற்புரையினைத் தொடர்ந்து அருட் தந்தை ஆனந்தகுமார் அடிகளார் மாதகல் பிரதேச மக்களின் தேவைகள் மற்றும் கோரிக் கைகள் குறித்த நீண்ட உரையொன்றினை ஆற்றினார்.

அருட்தந்தையின் உரையின் தொடர்ச் சியாக மாதகல் பிரதேச கல்வி சம்பந்தமான கோரிக்கைகளுடன் புனித சூசையப்பர் மகா வித்தியாலய அதிபர் நடராஜா, கடற்றொழில் சார்ந்த கோரிக்கைகளுடன் சகாயம் பீற்றர், பொதுப் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கை கள் தொடர்பில் மாதகல் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான சிற்றம்பலம், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பில் சமாதான நீதவான் கந்தசாமி, மாதகல் இந்து ஒன்றியம் சார்பில் நடராஜலிங்கம், இடம்பெயர்ந்து மீள்குடியேறி யோர் கோரிக்கைகள் தொடர்பில் மா.ஜெ ரால்ட் ஆகியோர் தத்தமது உரைகளை ஆற்றி யதுடன் அவை தொடர்பான கோரிக்கை மனுக்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவிடம் கையளித்தனர்.

மாதகல் பிரதேச பொதுமக்களினதும் பொது அமைப்புக்களினதும் கோரிக்கை களை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அக் கோரிக் கைகள் கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார். (6)

# சங்கானை, மானிப்பாய்க்கு தனியான வைத்திய அதிகாரி பணிமனைகள்

## சுகாதார திணைக்களம் தெரிவிப்பு

(பொன்னாலை)

சங்கானை- மானிப்பாய் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தனித்தனிப் பிரிவுகளாக இயங் கவுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் சங்கானை- மானிப் பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு என இயங்கி வந்த மேற்படி பிரிவே எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து சங்கானைப் பிரதே சத்துக்கு தனியாகவும், சண்டிலிப்பாய் பிரதே சத்துக்கு தனியாகவும் என இரண்டாகப் பிரிந்து இயங்கவுள்ளதென்று தெரிவிக்கப் படுகின்றது.

இதன் காரணமாக முன்பு இந்த வைத்திய அதிகாரி பணிமனைக்கு சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதிகளிலிருந்து செல்லும் மக்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே சென்று வர வேண்டியிருந்ததென்றும் தற் போது இரண்டாகப் பிரித்து இருவேறு இடங் களில் இயங்க நடவடிக்கை எடுத்திருப்பது தமது சிரமங்களுக்கு தீர்வு காண்பதாக அமைந் திருக்கின்ற தென்றும் அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தெல்லிப்பழை -உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பனிமனையும் கடந்த முதலாம் திகதியிலிருந்து இரண்டாகப் பிரிந்து இயங்கி வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. (2-49)

## இறுதிப் பரீட்சை

(சாவகச்சேரி)

இலங்கை நூலக சங்கத்தினரால் நடத்தப்படும் நூலக விஞ்ஞான டிப்ளோமா லெவல் I மாணவர்களுக்கான தேசிய மட்ட இறுதிப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம்,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு , கண்டி ஆகிய 4 மாவட்டங்க ளில் நடைபெறவுள்ளதுடன் இப் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களுக்கான விரிவு ரைகள், உள்ளகப் பயிற்சிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (6-4-29)

## வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசி மஹோற் சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதற்பகல் 11 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் வைகுண்ட ஏகாதசி தினமான எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று 6.15 மணிக்கு சுவர்க்கவாசல் தரிசனம் நடைபெறும்.

காலை 10 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும். இரவு ஏகாதசி புராண படனமும் பஜனையும் நடை பெறும். மறுநாள் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு திருவடி நிலை தீர்த்தக் கரைக்கு எழுந்தருளச் செல்லும் ஸ்ரீமத் வரதராஜப் பெருமாள் நண்பகல் 12 மணிக்கு அங்கு தீர்த்தமாடி பிற்பகல் 3 மணிக்கு இருப்பிடம் திரும்புவார். காலைத் திருவிழா தினமும் 9 மணிக்கு ஆரம்பமாகும். மாலைத் திருவிழா பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். (6-49)

## உற்பத்தித் திறன் மேம்படுத்தல் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தொழில் உறவுகள் மனித வள அமைச் சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் நடத்தப்படும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் பயிற்சிநெறி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ்.மாவட்ட செயலக புதிய கேட்போர்கூட கீழ்த்தள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல கல்வி வலயங்களிலும் இருந்து ஐந்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் இப் பயிற்சிநெறியில் தவறாது கலந்து கொள் ளுமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (6-9-19)




## சமூக ஆர்வலருக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களது வாழ் வாதாரம், கல்வி மற்றும் சூழல் என்பவற்றை பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை சொண்ட் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சமூக ஆர்வலர் கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சொண்ட் நிறுவனத் திட்ட முகாமையாளர் கேட்டுக்கொள்கின்றார். (6-4)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

## இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் மீட்கப்படாத தங்க அடகு நகைகளின் ஏலவிற்பனை

ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டபடி டிசம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெற்ற அடகு நகை ஏல விற்பனையில் அச்சுவேலிக்கிளைக்குரிய ஏலவிற்பனை பூர்த்தி செய் யப்படாமையால் இவ் ஏலவிற்பனை எதிர்வரும் 19.12.2009 அன்று நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையில் 04.03.2009 இற்கு முன்னர் 6 மாதங் களுக்கும் 04.09.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப் படாத நகைகள் இவ் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : 19.12.2009 (சனிக்கிழமை) காலை 9.00 மணி |
| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | : சுன்னாகம் மேற்தரக்கிளை காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். |

ஏலவிற்பனையை இரத்துச் செய்யும் /ஒத்திவைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

ந.சிவரட்ணம்
உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி.
(வடபிராந்தியம்)

(C-393(

# இரத்த விருத்திக்கு பேரீச்சை



உலகின் பழமையான நாகரிகமான 'மெசபடோமியா'வில்தான் முதன் முதலாகப் பேரீச்சம்பழத்தின் பயன் பற்றி கூறப்பட்டுள்ளது. எகிப்திய பிரமிட்டுகளிலும், கிரேக்க, ரோமானிய, பாலஸ்தீனிய வரலாற்றுக் குறிப்புகளிலும் இடம்பெற்றுள்ள பேரீச்சம்பழம் கடந்த 300 ஆண்டுகளாக உலகெங்கிலும் சத்துணவுப்பழமாக உலக மக்களால் உண்ணப்பட்டு வருகின்றது.

இரத்த விருத்திக்கான இயற்கை மருந்து பேரீச்சை. பேரீச்சையில் இரும்புச்சத்து மட்டுமல்ல, விற்றமின் ஏ, சுண்ணாம்புச் சத்தும் நிறைந்துள்ளது. தசை வளர்ச்சியை அதிகரித்து, உடல் வலிமையைப் பெருக்கும் இந்தப் பழம், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டிப்பாக சாப்பிட வேண்டிய அருமையான பழம்.

தினமும் ஒரு பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் இதயம் வலுப்பெறும். தினமும் இரண்டு பேரீச்சம்பழத்துடன் ஒரு டம்ளர் பால் சாப்பிட்டு வந்தால் இரத்தம் விருத்தியடையும்.

இனிப்பு உணவுகளைத் தவிர்த்துத் தவிக்கும் சர்க்கரை நோயாளிகள் கூட தாராளமாக பேரீச்சம்பழம் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தில் உள்ள இனிப்பால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஒரு டம்ளர் பேரீச்சம் பழத்தை அரைத்துக் கலந்து சாப்பிட்டு வர எலும்பு வலுப்பெறுவதுடன் உடல் வலிமையும் கூடும்.

எங்கேனும் அடிபட்டதால் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டவர்கள் தினமும் பேரீச்சம் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்த இழப்பை விரைவில் ஈடு கட்டலாம்.

வெண்குஷ்டம் இருப்பவர்கள் பேரீச்சம் பழச் சாறு குடிக்கலாம். இது இரத்தத்தில் சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்து நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும். தினசரி இரவில் 3 பேரீச்சம்பழம் சாப்பிட்டு சுடுதண்ணீர் அருந்தினால் மலச்சிக்கலைத் தரும் மந்தமான மலக்குடல் சுறுசுறுப்பாகி மலம் சுலபமாக வெளியேறும்.

பேரீச்சம் பழத்தை பிற பழங்களுடன் கலந்து சாலட் ஆக செய்து சாப்பிட வாதம், பித்தம், முட்டி வீக்கம் குணமாகும்.

பேரீச்சம் கொட்டையை வறுத்து பொடி செய்து காபி போல் பால் சர்க்கரை கலந்து பருகலாம். உடலுக்கு உரமளிக்கும் இதனை வாரம் ஓரிரு நாள் பருகுவது நல்லது.

பல் முளைக்கும் குழந்தைகள் வயிற்றுக் கடுப்பால் அவதியுறும் போது பேரீச்சம் பழத்தை சுடுநீரில் கலந்து குழைய வேக வைத்து வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் 3 வேளை பருக பேதி நிற்கும்.

தினசரி 4 பேரீச்சம்பழம் சாப்பிட்டு வருபவர்கட்கு வயிற்றுக்கடுப்பு, அஜீரணபேதி, மலச்சிக்கல், அமிபியாசிஸ் போன்ற வயிற்றுக் கோளாறுகள் வருவதில்லை. குறிப்பாக குடலுக்குப் பாதுகாப்பு கவசமாக பேரீச்சம் பழம் விளங்குகிறது.

**முடி பராமரிப்புக்கு பேரீச்சம்**

- 100 கிராம் உயர்ரக பேரீச்சம்பழத்தை எடுங்கள்.
- இதைக் கொட்டையுடன் தட்டி, மூழ்கும் அளவுக்குத் தண்ணீர் ஊற்றி, பத்து நிமிடம் கொதிக்க வைத்து இறக்குங்கள்.
- ஒருநாள் இதை அப்படியே விடுங்கள்.
- ஊற்றிய பேரீச்சம்பழத்தை அரைத்து வடிகட்டுங்கள்.
- இதனுடன் சமஅளவு தேங்காய் எண்ணெயைக் கலந்து காய்ச்சுங்கள். இதை வாரம் இருமுறை தலையில் தேய்த்து வர முடி நன்றாக வளரும்.




## ஏலக்காயின் மருத்துவ பயன்கள்



ஏலக்காயை பொடியாக்கி தேன்கலந்து சாப்பிட்டால் நரம்பின் பலம் கூடும். கண்பார்வை அதிகரிக்கும். ஏலப்பொடி, சீரகப்பொடி, சோம்புப் பொடி ஆகிய மூன்றையும் 5 கிராம் வீதம் எடுத்து கலந்து தேனில் குழைத்துச் சாப்பிட்டால் பசி கூடும். ஜீரணம் அதிகரிக்கும்.

ஏலத்தை பொடியாக்கி துளசிச் சாற்றுடன் கலந்து உட்கொண்டால் வாந்தி நிற்கும். ஏலக்காய் 4, ஒரு துண்டு சுக்கு ஆகியவற்றை சேர்த்து அரைத்து நீர் விட்டு கொதிக்க வைத்து பருகினால் வறட்டு இருமல், தொண்டை வலி ஆகியவைகள் தீரும்.

நான்கு ஏலத்தை கைப்பிடியளவு நாவல் இலைக் கொழுந்துடன் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலில் கலந்து சாப்பிட்டால் செரியாமை, சீதக்காதி தீரும். ஏலக்காய்4, கிராம்பு 4, வெற்றிலைக்காம்பு 5 ஆகியவைகளை பால் விட்டு அரைத்து சூடாக்கி நெற்றியில் பத்து போல் போட்டால் தலைவலி, சளி விலகும்.

## தொடர்ந்து குறட்டை விடுவதால் சர்க்கரைநோய் தாக்கும் அபாயம்

தூக்கத்தில் தொடர்ந்து குறட்டை விடுபவர்களை சர்க்கரை நோய் தாக்க 50 சதவீத வாய்ப்புள்ளதாக லண்டன் ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சியாளர் குழு குறட்டையால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி தீவிர ஆய்வு மேற்கொண்டது. அதுபற்றி லண்டனில் வெளியாகும் டெய்லி எக்ஸ்பிரஸ் இதழில் வெளியான விபரம் வருமாறு,



டைப் 2 டயாபடீஸ் எனப்படும் சர்க்கரை நோயின் ஒரு பிரிவுக்கு தூக்கமின்மை முக்கிய காரணமாக உள்ளது. நல்ல தூக்கம் இல்லாதவர்களை இந்நோய் தாக்கும் அபாயம் அதிகம். இந்நிலையில், தொடர்ந்து குறட்டை விடுபவர்களால் தூக்கத்தை தொடர முடிவதில்லை.

மூச்சுக் குழலின் காற்றுப் பகுதிகளில் உள்ள தசைகள் குறட்டையால் தடைபடுவதால் தூக்கம் கெடுகிறது. தொடர் குறட்டையால் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படுவதும் தூக்கமின்மைக்கு காரணம். இதனால், அமைதியாக தூங்குவோருடன் ஒப்பிடுகையில், குறட்டை விடுபவர்களுக்கு இந்நோய் ஏற்பட 50 சதவீத வாய்ப்புள்ளது.

குறட்டை விடுவோரின் உடல் இயக்கத்தில் அதிக மாற்றங்கள் ஏற்படும். பக்கவாதம், இதய நோய் ஆகியவற்றுக்கும் குறட்டை காரணமாகலாம்.

எனினும், குறட்டையைக் குறைக்க சிகிச்சை எடுத்துக் கொண்டால் சர்க்கரை நோய் உட்பட பல நோய்கள் ஏற்படும் ஆபத்தை தவிர்க்க முடியும். இவ்வாறு டெய்லி எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தி தெரிவிக்கிறது.

## புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் உடற்பயிற்சி



தினமும் தீவிரமாக உடற்பயிற்சி செய்பவர் களுக்கு வியாதிகளால் ஏற்படும் பாதிப்புகள் கட்டுப்பாட் டில் இருந்தது தெரியவந்துள்ளது.

கடின உடற்பயிற்சியானது அனைத்து வகைப் புற்று நோய் பாதிப்புக்களையும் கட்டுப்படுத்தினாலும் குறிப்பாக நுரையீரல் மற்றும் இரைப்பை புற்று நோய்க்கு நல்ல நிவாரணமாக இருக்கிறது.

இதற்காக தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்தால் போதுமானது. அதாவது, மெதுவாக ஓடுதல், நீச்சல் பயிற்சி, படகு ஓட்டுதல் போன்றவற்றையும் சேர்த்து உங்கள் உடற்பயிற்சி அமைய வேண்டும்.

விளையாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தால் கால்பந்து, டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களிலும் அரை மணி நேரம் ஈடுபடலாம்.

எதுவாக இருந்தாலும் ஓரிரு நாட்கள் செய்து விட்டு பின்னர் விட்டு விடுவதில் பயனில்லை. தொடர்ந்து செய்வதால் பலனுள்ளது என்கிறது மருத்துவ ஆய்வுகள்.

## புரதச்சத்து நிறைந்த வேர்க்கடலை



உலகம் முழுவதும் எளிதில் தங்கு தடையின்றிக் கிடைக்கும் முக்கியமான ஊட்டச் சத்து உள்ள உணவுப் பொருட்களுள் நிலக்கடலையும் ஒன்றாகும். வேர்க்கடலையில் உள்ள புரதம் சரிவிகிதமாக அமைந்திருக்கின்றது.

எனவே குழந்தைகள் வளர்ச்சி தடையின்றி இருக்க நிலக்கடலை நல்லது. சோயா பீன்ஸிற்கு அடுத்த தரமான உயர்ந்த புரதம், வேர்க்கடலையில் தான் இருக்கிறது. முட்டையில் உள்ளதைவிட இரண்டரை மடங்கு அதிகமான புரதம் வேர்க்கடலையில் இருக்கிறது.

மூளைச் சுறுசுறுப்பிற்கு உதவும் பொஸ்பரஸ், உப்பு பற்கள் மற்றும் எலும்புகளின் பலத்திற்கு கல்சியம், இரும்புச்சத்து, விற்றமின் ஈ, நியாஸின் போன்ற விற்றமின்களும் வேர்க்கடலையில் உள்ளன. இதனால் தானோ என்னவோ எளிமையாக வாழ்ந்த காந்திஜி தேவையான அளவு உடலுக்கும், மனதிற்கும் சக்திபெற வேர்க்கடலையும் ஆட்டுப்பாலும் சாப்பிட்டு வந்தார்.

எல்லாவிதமான இரத்தப் போக்குகளையும் இது தடுக்கும். பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சாப்பிட வேண்டிய உணவு வேர்கடலையாகும். பெருந்தீனிக்காரர்களும், உடல் பருமன் உள்ளவர்களும், உணவைக் குறைத்து உடல் மெலிய விரும்பினால் சாப்பாட்டு நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாக ஒரு கைப்பிடி அளவு வறுத்த வேர்க்கடலையைச் சாப்பிடவும்.

இத்துடன் சீனி சேர்க்காத தேநீர் அல்லது ரீ அருந்தவும். பிறகு ஒரு மணி நேரம் கழித்துச் சாப்பிட அமர்ந்தால் உணவை அதிக அளவில் சாப்பிட முடியாது. இதன் பொருட்டு உடல் எடையும் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். வயிற்றுப் போக்கு உடனே கட்டுப்படவும், பற்கள் பலம் பெறவும் வேர்க்கடலை சாப்பிடுவது நல்லது.

எல்லாவற்றையும் விட முக்கியமானது உடல் அழகும், இதயப் பாதுகாப்பும். வேர்க்கடலையில் உள்ள நியாஸின், தோலில் உள்ள புண்கள், கொப்புளங்கள் ஆறவும், இவை வராமல் முன்கூட்டியே தடுப்பதுடன் பளபளப்பான தோலையும் ஏற்படுத்தித் தருகிறது.

எந்த வயதுக்காரரும் தினமும் அதிகபட்சம் 50 கிராம் வரை சாப்பிட்டால் செயலாற்றல் மிக்க மருந்தாக வேர்க்கடலை செயல்படும்.

## கொழுப்பு அதிகமாகாமல் தடுக்க



அளவுக்கு அதிகமாக எந்த உணவையும் உண்ண வேண்டாம்.

போதுமான அளவு உணவை மட்டும் உண்ணவும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட சமையல் எண்ணெய்களை பயன்படுத்தவும்.

வனஸ்பதி / நெய் / வெண்ணெய் ஆகியவற்றை குறைவாக பயன்படுத்தவும்.

லினோலெனிக் அமிலம் நிறைந்த (பயறுகள், பச்சைக் கீரைகள் மற்றும் காய்கறிகள், வெந்தயம், கடுகு) உணவு பயன்படுத்தவும்.

ஆட்டுக்கறி, கோழிக்கறி ஆகியவற்றிற்கு பதிலாக மீன் உணவுகளை சாப்பிடவும்.

வறுத்த பொரித்த உணவுகளை விட ஆய்வில் வேக வைத்த உணவுகளை அதிகமாக சமைத்துச் சாப்பிடவும்.

ஒவ்வொரு மாதமும் பயன்படுத்தும் எண்ணெயை மாற்றிக் கொண்டே இருக்கவும்.

ஒரு முறை பொரித்த எண்ணெயை அன்றைய தினமே பயன்படுத்தி விட வேண்டும். எடுத்து வைத்து மறுநாள் பயன்படுத்தக்கூடாது.

# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில்

# சேர்.பொன்.இராமநாதன் (1851-1930)

02



பேராசிரியர்
கலைவாணி இராமநாதன்

"அந்தஸ்தும் செல்வவளமும் உள்ள ஒருவரிடத்தில் வழமையாக காணப்படும் ஆடம்பரம், பகட்டுக்கும் மேற்கத்தைய உலகளாவிய வாழ்க்கை முறையில் தோய்ந்துபோய் இராஜ போகவாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த விலை மதிப்புள்ள இராமநாதனுடைய நிலவிரிப்புக் களைக்கொண்ட அரண்களைப் போன்று அவரது சுகஸ்தான் இல்லத்தில் தனது காலணியற்ற பாதங்களைப் பதித்துமிடுக்கான பார்வையுடன் இராமநாதன் முன்தோன்றினார்" என்னும் இந்துசாதனப்பத்திரிகையின் குறிப்புரை அருட்பரானந்த சுவாமிகளின் ஞான வருகையினை தெளிவாக அறிவித்திருக்கின்றது.

சுவாமிகளின் வருகையானது அவரது வாழ்விலே ஞானப்பரவொலி என்னும் பாதையாகிய புதிய பாதை ஒன்றிணைத்திறந்து விட்டது. புலன் அனுபவத்திற்குரிய உலகாயத வாழ்வில் இருந்து அவரைவெளியே இழுத்து ஆன்ம ஞானக்கரை சேர்க்கும் முயற்சியிலும் அதனை உறுதியுடன் நிலைப்படுத்தும் நோக்குடனேயே சுவாமிகளின் இந்த வருகையானது இறைவனின் வழிகாட்டல் போலவே அமைந்தது.

அருட்பரானந்த சுவாமிகளின் சீடரான சேர்.பொன்.அவர்கள் தமதுசகோதரர் அருணாசலம் அவர்களுடன் இணைந்து சைவ சமயம், சித்தாந்தமெய்யியல் ஆகியவற்றை கற்றதுடன் யோகப் பயிற்சி, தியானம் என்பவற்றிலும் தமது குருவினது வழிகாட்டலின் கீழ் நன்கு பயிற்சி பெறுவதில் தீவிரமாக ஈடுபட்டார்.

வேதசிவாகமங்களில் காணப்பட்ட சமய மெய்யியல் பொக்கிசங்கள் யாவும் குருவானவரின் அருட்பார்வையினால் விரிந்து சைவ சிந்தாந்த மெய்யியலைக் கற்கும் அளவிற்கு இவரதுவாழ்விலே பெரும் திருப்பு முனையானது. உலகளாவிய தோற்றப்பாடுகளில் உண்மை நிலை பற்றிய நம்பிக்கையின்மை, ஆன்மீகத்தின் பெறுமதிகளில் தீவிரமான தேடலில் ஆர்வம், இவற்றால் புலன்நுகர்வு விடயங்களில் இருந்து மனமானது படிப்படியாக விலகிச் செல்ல ஆன்மீகத்தேடலில் அதிகளவு நாட்டம் உண்டானது. சமய சித்தாந்தம் பிரதான இடத்தை எடுத்துக்கொண்டது. சமய நூல்கள் கற்பதில் ஆர்வம் அதிகமானது.தியான யோகப்பயிற்சிகளில் பல மணி நேரம் செலவிட்டார்.

சேர்.பொன்.இராமநாதன் தமது சைவப் பணி, சமுதாய பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சித்தபுருஷர்களது நல்லாசிகளும் கிடைத்தன. யோகர்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் என்போரும் ஆசிர்வதித்துச் சென்றனர். எனவே அவரதுஅரசியல் பணி, சட்டம், தேசியம், சமூகம் முதலிய துறைகளிலும் மன ஒருமைப்பாட்டுடன் நன்கு கவனம் செலுத்தவும் முடிந்தது. அவரது அறிவு சார் புலமையானது கல்வி, சமயம் , சிந்த தாந்தம், பொருளியல் , கலை, கலாசாரம் ஆகிய சகலதுறைகளையும் தழுவி நின்றது.

### "சைவ சித்தாந்தம்" ஒரு சுருக்கமான விளக்கம்

சைவ சிந்தாந்தம் தற்காலத்திலே தத்துமாக ஏட்டளவில்மட்டுமன்றி மக்களதுசமய வாழ் வியலாகவும் பரிணமித்து வரும் காலமாகும். ஈழமாகிய சிவபூமியில் சித்தாந்தம் ஒரு வாழ்வியல் சிந்தனை என்பதனை பண்டிதமணி அவர்கள் கந்தபுராண கலாசாரம் என்ற பெயரில் அழைத்ததன் மூலம் சமூகமயப்படுத்தினார். கந்தபுராணம், சைவ சிந்தாந்தமுப்பொருள் தத்துவத்தின் விளக்கமாகவும் பதி- கந்தன், பசு -மக்கள் (ஆன்மாக்கள்) பாசமாகிய மும்மலங்கள் சூரன், சிங்கன், தாரகன் எனவும் தெளிவாக அங்கு விளக்கப்பட்டிருக்கின்றது. உலகினைப் படைத்து நடத்தும் முதல்வன் ஒருவன் உளன். அவனது அருட் குணங்கள் பல்வேறு பெயர்களாலும் குறிப்பிடத்தக்கன. அப்படியாயினும் அவனை 'சிவன்' என குறித்தல் இந்நெறியின் முதன்மைக் கொள்கையாகும் . அதனால் அது "சைவம்" எனவும் சைவ நெறியின் அறிவியல் அடிப்படை (The Rational of the Religion ) 'சிந்தாந்தம்' எனவும் ஆனது.

சைவ சித்தாந்தம் உண்மைப் பொருளை அடித்தளமாக வைத்து ஒழுக்க நெறியினை உணர்த்துவதாகும். 'எவ் உயிருக் கும் அன்பாய் இரு' என்பது இக் கொள்கையின் முதல் சிறப்பு விதியாகும். இதனை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்'' என்றார் திருமூலர் .''தம்மை உணர்ந்து தமையுடையதனை உணர்வார்- எம்மையுடைமை எமை இகழார்- தம்மை உணரார் உணராரே" என்பது சிவஞானபோத நூற் பாயிரத்தின் அவையடக்கமாகும்.

சைவ சித்தாந்த நெறியிலேயே கூறப்படும் ஒழுக்க மெய்யியல் இரு வகைப்படும். ஒன்று பொது ஒழுக்கம். அவையாவன சிவஞானசித்தியாரின் வாக்குப்படி "ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம்,உபசாரம், உறவு, சீலம் வழக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழக்கிலாத் துறவு, அறிவொடு அர்ச்சித்தல் ஆதி-இழுக்கிலார் அறங்கள்" எனப்பட்டனர்.

இவை இறை வன் கட்டளைகளுக்கு கீழ்ப் படிந்து ஒழுகுதல் எனக் குறிக்கும். (Obedience to God)

ஏனைய சிறப்பொழுக்கம், இறைவனது அருளாற்றலில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு மனதை ஒருமுகப்படுத்தி திறன் உணர்ந்து மனம் பற்றி மெய்யுணர்வு தலைப்பட்டு அவன் அருட்குணங்களில் தோய்ந்து- முடிவில் சிவனுடன் ஒன்றிக்கலந்து அவன் வண்ணமாய் சிவமயமாய் ஒன்றுதலுக்கு சாதனை செய்து கொண்டே இருப்பது. இதனை "அவனே தானே ஆகிய அந்நெறி" என சிவஞானபோதம் சுட்டும். சிவஞான போதம் சித்தாந்தத்தில் அதிகாரப் பிரமாண சாத்திரங்களில் முதன்மையானது. இந் நூலில் நான்கு இயல்கள் காணப்படுகின்றன.

அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதனை இயல், பயன் இயல் என்பன. பிரமாணங்கள், இலக்கணங்கள் என்னும் முதல் இரு இயலும் அறிவாராய்ச்சி அடிப்படையில்- அளவைகள், தர்க்கவாதங்கள் மூலம் உட்பொருளை நிறுவும் முயற்சியாக வுள்ளன. (தொடரும்)

---

## சரத் பொன் சேகாவை

# அன்று புகழ்ந்தவர் இன்று இகழ்கின்றார்கள் அச்ச உணர்வே இதற்கு காரணம்

## -தேசிய பிக்குகள் முன்னணி -

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஜெனரல் சரத்பொன் சேகாவை உயர்ந்த வார்த்தைகளால் புகழ்ந்து பாராட்டியவர்கள் அவரின் அரசியல் பிரவேசத்தால் அச்சமடைந்து இன்று தரக்குறைவான வார்த்தைகளால் அவரை விமர்சனம் செய்கிறார்கள் என்று தேசிய பிக்குகள் முன்னணியின் ஊடகச் செயலாளர் வகமுள்ளே உஜிததேரர் தெரிவித்தார்.

ஜெனரல் சரத்பொன்சேகா கடந்த 40 வருடங்களாக இராணுவத்தில் எந்தவித அவப்பெயருமில்லாமல் நாட்டிற்காக சேவையாற்றியுள்ளார்.

அவ்வாறான அனுபவம் வாய்ந்த அழுக்கற்ற ஒருவர் அரசியலில் பிரவேசிப்பது என்பது நாட்டிற்கு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பொன்சேகாவை ஆளும் கட்சியினர் விமர்சிப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார் .

இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில், ஜெனரல் சரத்பொன்சேகா இராணுவத்திலிருந்து விலகும் வரை அவரை பாராட்டி வாழ்த்திக் கொண்டிருந்தவர்கள் திடீரென அவரை பல்வேறு விதத்தில் விமர்சிப்பதற்கான காரணம் என்ன? எல்லாம் தமது அதிகாரம் பறிபோய்விடக்கூடாது என்பதற்காகவேயாகும்.

நாட்டின் பிரஜை ஒருவருக்கு அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை உண்டு.அந்த அடிப்படையிலேயே ஜெனரல் சரத்பொன்சேகா அரசியலில் ஈடுபட்டுள்ளார். இலங்கையில் அரசியலில் ஈடுபடுவோருக்கு இன்னன்ன தகைமை இருக்கவேண்டும் என்ற நிபந்தனை எதுவும் இல்லை.தற் பொழுது அரசியலில் ஈடுபட்டிருக்கும் சில அரசியல்வாதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க் கையில் இவர் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்.

ஜெனரல் சரத்பொன்சேகா வின் அனுபவம் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றை ஆராய்ந்து பார்க்கின்றபோது அவரின் தகுதி என்ன? என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆகையால் அரசியலில் ஈடுபடுவதற்கு அவருக்கு என்ன தகுதி இருக் கின்றது என்ற கேள்வி பொருத்தமற்றதெனவும் அவர் கூறினார். (2-6)

---

## ஜனாதிபதித் தேர்தலில்

# சரத்பொன்சேகாவுக்கான வடக்கின் ஆதரவு தெற்கு மக்களை வியப்படைய வைக்கும்

## மனோகணேசன் நம்பிக்கை



(கொழும்பு)

தென்பகுதி மக்கள் வியக்கும் அளவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் வட பகுதி தமிழ் மக்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தமது வாக்குகளை அள்ளி வழங்குவார்களென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நான்கு விடயங்களை முன்வைத்துள்ளனர். எதிர்கா லத்தில் அவர்களின் ஆதரவும் கிடைக்கு மென்ற நம்பிக்கை இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முக்கியமான நான்கு விடயங்களை முன்வைத் துள்ளனர். காணாமல் போனவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் முழுமையான விபரங்கள்,அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை குடியமர்த்தல், மீள் குடியேற்றம், இனப்பிரச்சினைத் தீர்வு போன்ற விடயங்களே கூட்டமைப்பினர் முன்வைக்கின்றனர்.

காணாமல் போன தமது உறவினர்கள் எங்குள்ளனர்? என்பதை அறியும் உரிமை உறவினர்களுக்கு உண்டு. இக் கேள்வியை முதலில் அரசாங்கத்திடமே கேட்கவேண்டும்.

இன்று விடுதலைப்புலிகள் இல்லை. யுத்தம் முடிந்துவிட்டது. அப்படியானால் படிப்படியாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களில், எம்மக்களை குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தென்பகுதி மற்றும் வடக்கு கிழக்கு உட்பட முழுநாடுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல் மோசடி மிக்க ஆட்சியினை எதிர்க்கின்றது. இன்று அனைவரும் முரண்பாடுகளை மறந்து ஓரணியில் திரண்டுள்ளோம். நிச்சயம் எமது பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவார்.

சிங்கள மக்கள் மட்டுமல்ல அனைவரும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக திரண்டுள்ளனர் என்றார். (2-6)

கத்தி சாணைக் கல்லைத் தின்கிறது,
சாணைக் கல் கத்தியைத் தின்கிறது.
~ ஆபிரிக்கா

வலம்புரி

## என்ர ஐயாக்கள்... இப்படிவருமென்று யாரு நினைத்தது

பழுப்பதற்கு இன்னமும் காலம் இருப்பதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்ற நினைப்பு.

நினைத்தது நினைத்தபடி நடக்காமையால் வந்து சேர்ந்தது வினை.

ஓரணியில் நின்று போர் வெற்றி கொண்டாடியவர்கள் இப்போது பிரிந்து நின்று சனநாயகப் போர் புரிகின்றனர்.

இதற்குப் பெயர் சனநாயகமா? என்று நீங்கள் முணுமுணுப்பதும் கேட்காமல் இல்லை.

இருந்தும் இலங்கையில் போக்கிலித்தனங்களுக்கு சனநாயகம் என்று பெயர். ஆகையினால் இதுவும் சனநாயகம்தான்.

வன்னிப் போரில் சரணடையும் விடுதலைப் புலி உறுப்பினர்களை சுட்டுக் கொல்லுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே உத்தரவிட்டாரென முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்தமை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதிர்ச்சி இது மட்டுமல்ல, எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி வரை அதிர்ச்சிகள், பேரதிர்ச்சிகள் எனப் பல அதிர்ச்சித் தகவல்கள் காத்திருக்கின்றன.

அப்படியானால் அதற்குப் பின்னர் அதிர்ச்சிகள் முடிந்து விடுமா? என்றால் அதுதான் இல்லை.

ஜனிவரி 26ஆம் திகதிக்குப் பின்னர் தான் 'மகா அதிர்ச்சிகள்' காத்திருக்கின்றன.

எதுவாயினும் மகா ஜனங்களாகிய நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

நாம் அவசரப்பட்டால் சில முக்கிய விடயங்கள் அடங்கிப் போய்விடும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் மாறிமாறி குற்றம் சுமத்தும் படலம் இப்போதுதான் சூடுபிடித்துள்ளது.

இராணுவத்தளபதியாக இருந்த ஜென்ரல் சரத் பொன்சேகாவின் இடத்தில் யார் இருந்தாலும் போரில் வெற்றிபெற்றிருக்க முடியும் என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்து சிராய் கிளப்பியுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு கடுப்பேற்றுவதற்காக கோத்தபாய கூறிய கருத்து இராணுவத்தரப்பிலும் காயத்தை ஏற்படுத்திவிட்டது என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

கோத்தபாயவின் கருத்துக்குப் பின்னரே சரத் பொன்சேகா திருவாய் மலர்ந்து, சரணடையும் விடுதலைப்புலி உறுப்பினர்களைச் சுட்டுக் கொல்லுமாறு கோத்தபாயவே உத்தரவிட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறி ஸ்ரீமான் பொது ஜனங்களுக்கு தேர்தல் ஊக்க மருந்து ஏற்றிய சரத் பொன்சேகா இன்னும் பல விடயங்களை கொட்டித் தீர்ப்பார் என்று நம்பப்படுகிறது.

என்ன செய்வது! என்ர ஐயாக்கள்... இப்படி வருமென்று யார் நினைத்தது. எல்லாம் இறை (வன்) செயல்.

## கட்டுநாயக்காவில்
# பயணிகள் உடைமைகள் கொள்ளை; மூன்று ஊழியர்கள் கைதாகினர்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்லும் மற்றும் இலங்கைக்கு வரும் பயணிகளின் பயணப் பொதிகளைத் சூட்சுமமாக திறந்து பொருட்களைக் கொள்ளையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் மூன்று ஊழியர்கள் கடந்த சனிக்கிழமை விமான நிலையக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல காலமாக இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டு வந்த இவர்கள் பயணிகளிடம் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் புதைத்திருந்த ஒரு தொகைத் தங்கமும் மீட்கப்பட்டுள்ளது.

அத்தோடு இவர்கள் கொள்ளையிட்டுள்ள ஒரு தொகை தங்க ஆபரணங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 5 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக விமான நிலைய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மற்றுமொரு சந்தேக நபரின் வீட்டின் படுக்கை அறையில் மறைத்து வைத்திருந்த 70 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் சிலரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (6-2)

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன

## இந்திய வட்டாரம் தகவல்



(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்பட உள்ளதாக இந்திய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தவழக்கின் பிரதான சந்தேக நபர்க ளான புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மான் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக இலங்கை உத்தியோகபூர் வமாக அறிவித்ததனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் இறுதிக் கட்ட யுத்தத்தில் உயரிழந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் , இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## அசாமில் ஒரே குடும்பத்தில்
# 6 பேர் படுகொலை 2 சிறுவர்கள் தலை துண்டிப்பு

அசாம் மாநிலம் சோணாப்பூரில் உள்ள கோரிடோலாங் என்ற இடத்தில் உள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 சிறுவர்கள் 2 பெண்கள் என 6 பேர் அடையாளம் தெரியாதவர்களால் அதிகாலையில் வீட்டில் படுகொலை செய்யப்பட்டு கிடந்தனர்.

அவர்களில் 2 சிறுவர்களின் உடல்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் முண்டமா க கிடந்தன. ஆனால் சிறுவர்களின் தலையை காணவில்லை.

எனவே 2 சிறுவர்களும் நரபலி கொடுக்கப்பட்டிருக்கலாம் என தெரிகிறது. பொலிசாரும் இந்த சம்பவம் நரபலியாக இருக்கும் என கருதி வழக்கு பதிவு செய்து உள்ளனர். (6-2)

# தேர்தல் செயலகத்திற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் செயலகத்துக்கு நேற்று முதல் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முடிவடையும் வரை இந்த விசேட பாதுகாப்பு அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேர்தல் திணைக்களத்தின் பிரதான செயலகத்துக்கு முன்பாக பொலிஸ் சோதனை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது இங்கு 15 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் வெலிகட பொலிஸார் இந்த சோதனை முகாமுக்கு பொறுப்பாகச் செயற்படுவர் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரையில் 12 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (6-2)

# அனல் மின் நிலைய நிர்மாணிப்புபணிகள் சம்பூரில் ஆரம்பிக்கப்படவுள்ளன

## மின்சக்தி எரிசக்தி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது அனல் மின் நிலைய நிர்மாணப் பணிகள் சம்பூரில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

நிர்மாணிக்கப்படும் இவ்வனல் மின் நிலையத்தினூடாக 1000 மெகா வோர்ட்ஸ் மின்சார உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபையும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனமும் இணைந்து இத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளன. இதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளன.

இதன் நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## கல்வியும் சமுதாயமும்

ஒவ்வொருவனும் கட்டளையிடவே விரும்புகிறான். கீழ்ப்படிவதற்கு ஒருவரும் தயாராக இல்லை. பண்டைக்காலத்தில் நிலவி வந்த வியப்பிற்குரிய பிரம்மச்சரிய முறை இந்த நாளில் மறைந்து போனதுதான் காரணம்.

முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும். எப்போதும் முதலில் வேலைகாரனாக இருக்கக் கற்றுக்கொள். அதன் பின்பு எஜமானனாகும் தகுதி உனக்கு வந்து சேரும்.

கல்வி, கல்வி, கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகயையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

# பருவ நிலை மாநாட்டில் குழப்பம் போராட்டக்காரர் பொலிஸாரால் கைது

(கோபன்கஹெறன்)

டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன் கஹெனில் நடக்கும் பருவநிலை மாற்றம் குறித்த 12 நாள் மாநாடு நடக்கும் இடத்தில் போராட்டம் நடத்திய ஆயிரம் பேர் கைது செய் யப்பட்டனர்.

உலகம் வெப்பமயமாவதன் காரணமாக பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பனிமலைகள் உருகத் தொடங்கி உள் ளன. இதனால் கடல் மட்டம் அதிகரித்து குட்டித் தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. அத்தோடு மழை குறைந்து வெயில் அதிகரித்து வருகிறது.

இதனால் பருவநிலை மாற்றம் குறித்து ஆராய்வதற்காகவும் புவி வெப்பம் அடை வதை தடுப்பதற்காகவும் நடவடிக்கை எடுப்ப தற்காகவும் உலக நாடுகள் மாநாடு டென் மார்க் நாட்டில் கோபன்கஹெறன் நகரில் நடந்து வருகிறது.

இந்த பிரச்சினைக்கு உறுதியான நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி யுறுத்தி மாநாடு நடந்த இடத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராட்டம் நடத்தினார்கள் மாநாடு நடக்கும் இடத்துக்கு 4 மணி நேர பேரணி நடத்தப்பட்டது.

இதில் இலட்சக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் கைகளில் தங்கள் கோரிக்கைகளை தாங்கிய விளம் பரத்தட்டிகளை வைத்து இருந்தனர். பட்டாசு களை வெடித்து தங்கள் போராட்டத்தின் மீது தலைவர்களின் கவனத்தை ஈர்க்க முயன்ற னர்.

போராட்டக்காரர்கள் 928 பேரை டென் மார்க் பொலிஸார் கைது செய்தனர். இந்த பேரணியில் கலந்து கொண்ட பெண்களும் சிறுவர்களும் கைது செய்யப்பட்டனர். கைதா னவர்களில் 4 அல்லது 5 பேர் மீது மட்டும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என் றும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

(2-6)

# இத்தாலிய பிரதமர் மீது தாக்குதல் மக்கள் மத்தியில் அதிர்ச்சி



இத்தாலியின் மிலன் நகரில் நடந்த பேர ணயின் போது அந்நாட்டு பிரதமர் சில் வியோ பெர்லுஸ்கோனி தாக்கப்பட்டார்.

73 வயதான பிரதமர் பெர்லுஸ்கோனி அவரது காரின் அருகே நின்று கொண்டு ஓட்டோகிராப் புத்தகங்களில் கையெழுத்திட் டுக்கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் திடீரென பாய்ந்து பிரதமரின் முகத்தில் தாக்கினார்.

இதில் பிரதமர் நிலை குலைந்து கீழே விழுந்தார். பிரதமரின் மூக்கிலும், வாயிலும் பலத்த காயம் ஏற்பட்டது. இரத்தம் கொட்டிய நிலையில் உடனடியாக அவர் மிலன் மருத்து வ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டார். பிரதமர் தாக்கப்பட்ட விவகாரம் இத்தாலி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

தாக்குதலில் ஈடுபட்டவரை பொலிஸார் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (6-2)

# காகிதத்தில் பட்டரி தயாரிப்பு

சாதாரண காகிதத்தைப் பயன்படுத்தி குறைந்த எடை கொண்ட பட்டரிகள் உருவாக் கப்பட்டுள்ளன. இது குறித்து கலிபோர்னியா வில் அமைந்துள்ள ஸ்டோபோர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறிய தாவது,

சில்வர் மற்றும் காபன் நானோ பொருட் களால் தயாரிக்கப்பட்டமை தடவப்பட்ட காகி தங்களை வெற்றிகரமாக பேப்பர் பட்டரியாக மாற்றி உள்ளோம். இவை எடை குறைந் தாகவும் அதிக சக்திகளை சேமித்து வைப்ப தாகவும் இருக்கும். முன்பு லிதியம் அயன் பட்டரிகளை விட 10 மடங்கு சக்தி வாய்ந்த பற் றரிகளை உருவாக்க சிலிகான் நானோ வயர்கள் பயன்படுத்தப்பட்டன. அவை தற் போது லப்டாப் போன்ற சாதனங்களில் பயன் படுத்தப்படுகின்றன.

மேம்பட்ட காகித தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த செலவில் குறைந்த எடையில் மற்றும் அதிக செயல்திறன் வாய்ந்த ஆற்றல் சேமிக்கும் பட்டரிகள் உரு வாக்கப்பட்டுள்ளன.

இவ்வகை பட்டரிகள் மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்களையும் இயக்க பயன் படுத்தலாம் இவ்வாறு அவர்கள் கூறினார்.

(6-2)

# புகை பிடித்தல் தடைச்சட்டத்தை மிகக் கடுமையாக அமுல் படுத்தவேண்டும்

## உலக சுகாதார நிறுவனம் வேண்டுகை

(லண்டன்)

புகை பிடிக்க தடை விதிக்கும் சட்டங் களால் உலகின் 94 சதவீதம் பேர் பாதுகாக்கப் படுவதில்லை என்று உலக சுகாதார நிறுவ னம் தெரிவித்துள்ளது.

உலகின் பல நாடுகளில் புகை பிடிப்பதற்கு தடை விதிக்கும் சட்டங்கள் பல்வேறு வடிவங் களில் இயற்றப்பட்டுள்ளன. இருப்பினும் அவை வெறும் 2.3 சதவீதம் பேரை அதாவது 15 கோடி மக்களை மட்டுமே காக்கின்றன என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலையால் மரணம் நிச்சயம் என் பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட பின் பும் கூட புகைப்பழக்கம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால் வளர்ந்த நாடுகளான அமெ ரிக்கா, பிரிட்டன், ஜப்பான்போன்றவற்றில் புகை பிடிக்கும் பழக்கம் மிகவும் குறைந் துள்ளதாகவும் ஏழை நாடுகள், வளரும் நாடு கள் ஆகியவற்றில் புகை பிடிக்கும் பழக்கம் அதி கரித்துள்ளதாகவும் அவர் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கவலை வெளியிட்டுள்ள உலகசுகாதார நிறுவனம் உலக நாடுகள் தாங் கள் இயற்றியுள்ள புகை பிடிக்க தடை விதிக் கும் சட்டங்கள் மிகக் கடுமையாக அமுல் படுத்த வேண்டும். இந்தச் சட்டங்கள் உலகின் மொத்த மக்கள் தொகையில் 94 சதவீதம் பேரைக் காப்பதில்லை. இப்போது புகை பிடிக் கும் பழக்கத்தால் ஆண்டுக்கு 50 இலட்சம் பேர் இறக்கின்றனர்.

இப்படி இறப்பவர்களில் பெரும்பாலா னோர் ஏழை நாடுகளைச் சேர்ந்தவர்கள் தான் சட்டங்களைத் தீவிரமாக அமுல்படுத்த வில்லையென்றால் 2030 இற்குள் ஆண் டுக்கு 80 இலட்சம் பேர் பலியாகக் கூடிய நிலை ஏற்படும் என்று தெரிவித்துள்ளது.

(2-6)

# பூமி வெப்பமாதலால் இமயமலை உருகிவிடும் மீன் வளம் முழுவதுமாய் அழிந்துவிடும்

## ஐ.நா அறிக்கை

(கோபன்ஹெகன்)

பருவநிலை மாற்றம் தொடர்பாக டென் மார்க் நாட்டில் உள்ள கோபன்ஹெகன் நக ரில் சர்வதேச மாநாடு நடைபெற்று வரு கிறது.

அந்த மாநாட்டில், பூமி வெப்பமடைந்து வருவது தொடர்பாக பல்வேறு தலைப்புக ளின் கீழ் பல்வேறு விதமான அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த சூழ் நிலையில் ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பு சார்பாக கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.




அந்த அறிக்கையில்,

சர்வதேச அளவில் பூமியின் வெப்ப நிலை உயர்ந்து வரும் சராசரி அளவை விட, இமயமலையின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.

அடுத்த பத்து ஆண்டுகளில் இமய மலை மற்றும் இந்துகுஷ் மலைகளில் சுமார் ஒரு டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பம் அதி கரிக்கும். அதனால், அவை உருகத் தொடங்கும்.

எனவே கடுமையான வறட்சி அல்லது மிகக் கடுமையான வெள்ளப்பெருக்கு போன்ற காலநிலை ஏற்படும். இந்த மலைகளின் அடி வாரம் மற்றும் இவற்றில் இருந்து உற்பத்தி யாகும் நதிகளின் படுகைகளில் வசிக்கும் இலட்சக்கணக்கான மக்கள் மிகவும் பாதிப்புக் குள்ளாவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபா ளம் ஆகிய நாடுகளை சேர்ந்த 5 குழுவின ரின் ஆராய்ச்சியின் அடிப்படையில் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டது.

இது தவிர ஐ.நா உணவு மற்றும் வேளாண் துறை சார்பாக மற்றொரு அறிக்கையும் தாக் கல் செய்யப்பட்டது.

அதில் அழிவை நோக்கி சென்று கொண்டி ருக்கும் மீன் வளத்தை பாதுகாக்க உடனடி யாக சில முக்கிய முடிவுகளை எடுக்க வேண் டும்.

இல்லாவிட்டால், பூமி வெப்பமயமாதல் காரணமாக மீன் வளம் முழுவதும் அழிந்து விடும். ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. (6-2)

# மூத்த இளவரசர் வில்லியமை அரசராக்க மகாராணி முடிவு

## பிரிட்டன் பத்திரிகை தகவல்

(லண்டன்)

பிரிட்டனின் அடுத்த அரசராக இளவரசர்



வில்லியம் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது. இதற்கான உறுதியான நடவடிக் கைகளை ராணி எலிசபெத் மேற்கொண்டு வருகின்றார்.

இளவரசர் சார்ள்ஸ் -மறைந்த டயானா தம் பதியின் மூத்த மகனான வில்லியமுக்கு தற் போது 27 வயதாகிறது. லண்டனில் வெளி யாகும் டெய்லி மெயில் பத்திரிகை இது தொடர் பாக வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

பிரிட்டன் அரசராக வில்லியமை அறி விக்க உறுதியான நடவடிக்கைகளை ராணி எலிசபத் மேற்கொண்டுள்ளார்.

இதன் படி தனது பொதுப்பணிகளில் சில வற்றை வில்லியமிடம் ஒப்படைக்குமாறு அவர் கூறியுள்ளார்.

தனது மகன் இளவரசர் சார்ள்ஸை விட வில்லியம் தான் அரச பதவிக்கு பொருத்தமா னவராக இருப்பார் என்று ராணி கருது வதாகவும் தெரிகிறது.

பிரிட்டன் அரசின் உயர் அதிகாரி ஒரு வருக்கு ராணி எழுதியுள்ள கடிதத்தின் மூலம் இந்த தகவல் தங்களுக்குக் கிடைத்துள்ள தாக அந்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ராணி எலிசபத் வழக் கமாக பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் அடுத்த ஆண்டு முதல் வில்லியம் கலந்துகொள்வார் என்றும் தெரிகிறது.

ராணிக்கு தற்போது 83 வயதாவது குறிப் பிடத்தக்கது. இது தவிர இளவரசர்கள் வில்லி யம் , ஹாரிக்கு பணம் ஒதுக்குவது தொடர்பா கவும் கருவூல அதிகாரிக்கு ராணி கடிதம் எழு தியுள்ளார். இந்த நடவடிக்கைகள் அனைத் தும் வில்லியமை அரசராக்க ராணி தயாராகி வருகிறார் என்பதையே காட்டுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2)

# தலிபான்களுக்கு எதிராக புதிய நடவடிக்கை

## ஆப்கானிஸ்தானில் பிரிட்டன் பிரதமர்

ஆப்கானிஸ்தானுக்கு எவ்வித முன்னறி வுப்புமின்றி சென்றுள்ள பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன் தலிபான்களுக்கு எதிரான புதிய நடவடிக்கை இடம்பெறும் என்று தெரி வித்துள்ளார்.

கந்தஹாரில் விமானத்தளம் ஒன்றில் ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது கர்சாயை சந் தித்த பிரிட்டிஷ் பிரதமர் உள்ளூர் ஆட்களை பணியமர்த்துவதற்காக கர்சாய் மேற்கொண்டு வரும் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்தார்.

தன்னுடைய பங்குக்கு ஆப்கானிஸ்தா னில் பாதுகாப்பு கொண்டு வருவதற்காக வெளி நாட்டு துருப்பினர் காயமடைவதும், கொல் லப்படுவதும் கண்டு தான் வருந்துவதாக ஹமீது கர்சாய் கூறினார்.

தங்களிடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுவதையும் இரு தலைவர்களும் மறுத்தனர்.

இதற்கு முன்னர் ஆப்கானிஸ்தான் நிர் வாகத்தில் நிலவும் இலஞ்ச லாவண்யத்தை பிரிட்டன் பிரதமர் பிரவுன் குறை கூறியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (6-2)

## யுவராஜ் காயத்தால் அவதி



இந்திய அணியின் நட்சத்திர சகல துறை ஆட்டக்காரர் யுவராஜ் சிங் உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொகாலியில் நடைபெற்ற 2-வது இருபது-20 போட்டியில் யுவராஜ் சிங் உபாதைக்குள்ளாகினார். இதனால் ராஜ்கோட்டில் இன்று நடைபெறவுள்ள முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் யுவராஜ் சிங் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உபாதையின் நிலைமை மோசமாகக் காணப்படுவதாகவும் 3 வாரங்களுக்கு ஓய்வெடுக்க நேரிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்களின் ஆலோசனைக்கு ஏற்ப இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இறுதியாக நடைபெற்ற இருபது-20 போட்டியில் யுவராஜ் சிங் அபார திறமையை வெளிப்படுத்தி இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணி தற்காப்பு ஆட்டம்; சமநிலை நோக்கி 3 ஆவது டெஸ்ட்

(நேபியர்)

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி நேற்றைய 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது. நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற்றுத் தொடர் சமநிலையில் உள்ள நிலையில் தீர்க்கமான 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 11 ஆம் திகதி நேபியரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 471 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 248 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 4 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி நேற்றைய 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் முகமெட் யூசுப் 89 ஓட்டங்களையும் பைசல் இக்பால் 67, சல்மான் பட் 66, இம்ராம் பர்காத் 61 ஓட்டங்களையும் உமர் அக்மல் ஆட்டமிழக்காமல் 48





ஓட்டங்களையும் மிஷ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் குப்தில் 2 விக்கெட்டுக்களையும் மாட்டீன், ஓ பிறின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியில் 5-வதும் இறுதி நாளான இன்று பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 99 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

# ஒரு நாள் தொடரில் இலங்கை சாதிக்குமா? முதலாவது போட்டியில் இன்று பலப்பரீட்சை



(ராஜ்கோட்)

இந்திய-இலங்கை அணிகள் மோதும் முதலாவது ஒரு நாள் போட்டி இன்று ராஜ்கோட்டில் நடக்கின்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலில் பங்கேற்றது.

இதில் இந்திய அணி தொடரை 2:0 எனக் கைப்பற்றியது. இதன் மூலம் தனது 77 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் முதன் முறையாக இந்தியா நம்பர்-01 இடம்பெற்றுச் சாதித்தது.

அடுத்து நடந்த இருபது-20 தொடரில் முதல் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது. ஆனாலும் மொகாலியில் நடந்த 2-வது போட்டியில் இந்திய அணி சாதனை வெற்றி பெற்றது.

இதன் மூலம் இருபது-20 தொடரை 1:1 எனச் சமன் செய்தது. இறுதியாக 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் மோதவுள்ளன. முதல் போட்டி குஜராத்தில் உள்ள ராஜ்கோட்டில் இன்று நடக்கின்றது.

சேவாக், காம்பீர், சச்சின், யுவராஜ், தோனி உள்ளிட்டோர் சிறப்பான நிலையில் இருப்பதால் இந்திய அணி வெற்றியுடன் ஆரம்பிக்கக் காத்திருக்கின்றது.

இருபது-20 தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டிருந்த சகீர்கான், ஹர்பஜன் சிங் அணிக்குத் திரும்புவதால் பந்து வீச்சுப் பலம் பெற்றுள்ளது. டெஸ்ட் தொடர் தோல்விக்கு இலங்கை அணி பழிதீர்க்கக் காத்திருக்கின்றது.

ஆனாலும் சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது எளிதான காரியமல்ல.

### நம்பர்-01 நோக்கி

தற்போது ஒரு நாள் போட்டிக்கான ஐ.சி.சி. தர வரிசையில் இந்திய அணி 122 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா 130 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா (119) 3-வது இடத்தில் இருக்கின்றது.

தற்போதைய ஒரு நாள் தொடரை இந்தியா 5:0 என வென்றால் 4 புள்ளிகள் பெற்று அவுஸ்திரேலியாவை நெருங்கலாம். ஒரு வேளை 1:4 என இழந்தால் 117 புள்ளிகளுடன் தென்னாபிரிக்காவுக்கு அடுத்த இடத்திற்குத் தள்ளப்படலாம்.

இலங்கை அணி 3:2 என வென்றால் தற்போதைய 7-வது இடத்தில் (106) இருந்து முன்னேறி 6-வது இடம் பெறலாம். ஒரு வேளை 5:0 என முழுமையாகக் கைப்பற்றினால் 3-வது இடத்தைப் பிடிக்கலாம்.

### வெற்றியுடன் முடிப்போம்

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடர் குறித்து இந்தியா அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் கூறியதாவது,

இந்த ஆண்டு முழுவதும் இந்திய அணியினர் சிறப்பான கிரிக்கெட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். தொடர்ந்து அபார ஆட்டத்தின் மூலம் எதிர்காலத்திலும் அசத்த முயற்சிப்போம்.

எங்கள் அணியில் சேவாக், யுவராஜ் இருவரும் சிறந்த வீரர்கள். அவர்கள் எப்போது துடுப்பாட்டம் செய்தாலும் அதைப் பார்ப்பதற்கு உற்சாகமாக இருக்கும். அதேபோல் இலங்கைக்கு எதிராக இன்று ஆரம்பமாகவுள்ள ஒரு நாள் தொடரில் கடினமாகப் போராடி வென்று இந்த ஆண்டினை வெற்றிகரமாக முடிக்க விரும்புகின்றோம்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறிசாந் விரைவில் குணமடைந்து திரும்ப இறைவனிடம் வேண்டுகின்றேன். இவ்வாறு ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

### சச்சினுக்கு சிறந்த வரவேற்பு

இந்திய வீரர்கள் ராஜ்கோட்டிலுள்ள இம்பீரியல் ஹோட்டலில் தங்கியுள்ளனர். இங்கு சச்சினுக்கு விசேட ரூம் வழங்கப்பட்டுள்ளது. தவிர இவர் சர்வதேச கிரிக்கெட்டில் 30 ஆயிரம் ஓட்டங்களை கடந்ததை கௌரவிக்கும் விதமாக 30 கிலோக்கிராம் எடை கொண்ட பிரமாண்ட கேக் ஒன்றுக்கு ஓடர் கொடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஹோட்டல் இயக்குநர் அதுல் சேத் கூறுகையில்,

நட்சத்திரப் படுக்கைகளும் 2 குளியல் அறை, பெரிய உணவருந்தும் அறை கொண்ட சிறந்த சூட் ரூம் சச்சினுக்கு அளிக்கவுள்ளோம்.

பொதுவாக இத்தகைய அறை அணித் தலைவர்களுக்குத்தான் வழங்கப்படும். சச்சினின் சாதனைக்காக இம்முறை இந்த விசேட அறையை வழங்கியுள்ளோம் என்றார்.

### சிறிசாந் நல்ல முன்னேற்றம்

பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தியக் கிரிக்கெட் வீரர் சிறிசாந் உடல் நிலையில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது.

# 2-வது ஒரு நாள் போட்டி; நாக்பூருக்கு மாற்றம்

இந்திய -இலங்கை அணிகள் இடையேயான 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

தனி தெலுங்கானா பிரச்சினையைத் தொடர்ந்து ஆந்திர மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் கலவரம் ஏற்பட்டது. அங்கு தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் விசாகப்பட்டினம் போட்டிக்கான டிக்கெட் விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது.

விசாகப்பட்டினம் போட்டி பாதுகாப்புக் குறித்துப் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆந்திர மாநில கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் நேற்று ஆலோசனை நடத்தினர். போதுமான அளவுக்குத் தங்களால் பாதுகாப்பு அளிக்க முடியாது என்று பொலிஸ் அதிகாரிகள் கைவிரித்து விட்டனர்.

இதனைத் தொடர்ந்து விசாகப்பட்டினத்தில் நடைபெறுவதாக இருந்த போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

இந் நிலையில் 2-வது ஒரு நாள் போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூருக்கு மாற்றம் செய்யப்பட்டது. இதை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

# இந்தியத் துணைக் கண்டத்தில் டெஸ்ட் போட்டிகள் சமநிலையில்

## அவுஸி. அணித் தலைவர் பொன்டிங் வருத்தம்

(மெல்பேர்ன்)

இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்கும் பெரும்பாலான டெஸ்ட் போட்டிகள் சமநிலையில் முடிபது வருத்தம் அளிக்கின்றது என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பொன்டிங் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இருபது-20 போட்டிகள் வருகைக்குப் பின் டெஸ்ட் போட்டிகளின் நிலை கேள்விக் குறியாகி வருகின்றது. தவிர டெஸ்ட் போட்டிகளில் முடிபுகளை மக்கள் எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

இந் நிலையில் இது குறித்து அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் கூறியதாவது,

என்னை பொறுத்தவரையில் டெஸ்ட் போட்டிதான் சிறந்தது. அதிகளவிலான டெஸ்ட் தொடர்களில் நாங்கள் விளையாடுவது எங்களுக்கு அதிர்ஷ்டம்தான். எங்களுக்குச் சிறந்த எதிரணியாக தென்னாபிரிக்கா இருந்து வருகின்றது. தவிர ஆஷஸ் டெஸ்ட் தொடரும் சிறப்பானதுதான்.

சமீப காலமாக இந்திய அணியும் எங்களுக்கு எதிரான அசத்தலான திறமையை



வெளிப்படுத்தி வருகின்றது. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்கும் டெஸ்ட் போட்டிகள் பெரும்பாலும் சமநிலையில்தான் முடிகின்றன. இது இந்த ஆட்டத்திற்கு சோகமான செய்தி.

ஆனால் நாங்கள் விளையாடும் டெஸ்ட் போட்டிகளில் போராட்டத்தை வெளிப்படுத்தி எப்படியும் முடிபை நோக்கிக் கொண்டு செல்கின்றோம். இவ்வாறு பொன்டிங் கூறினார்.

# பிரான்ஸ் தேர்தல் பெருவெற்றி தனிநாடே தமிழ் மக்களின் முடிவு

## பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

(பாரிஸ்)

பிரான்சில் கடந்த 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை மீள் வலியுறுத்தும் வாக்கெடுப்பில் பெரும் வெற்றி கிடைத்துள்ளது.

வாக்களித்தவர்களில் 99வீதமானவர்கள் தமிழீழமே தமிழ் மக்களின் ஒரே முடிபு என்பதை தங்கள் வாக்குகளின் மூலம் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று மதியம் பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையின் செயலர் செல்வி சாளினி தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், தேர்தல் முடிபுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன. இதில் தற்போது வெளியாகியுள்ள பாரிஸ் மற்றும் அதன் சுற்று நகர்ப் பகுதி முடிபுகள் அறிவிக்கப்படுள் என.

அந்த வகையில் பாரிஸின் புறநகர்ப் பகுதியான லாகூர்நெவ் வாக்குச் சாவடியிலேயே மிக அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன. அங்கு 7768 பேர் வாக்களித்துள்ளனர். அத்துடன் 93ஆவது மாவட்டத்தில் அதிக வாக்குகள் பதிவாகியுள்ளன. இங்கு 13306 பேர் வாக்களித்துள்ளனர்.

இதேவேளை பாரிஸில் 8475வாக் காளர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்துள்ளனர். பாரிஸ் மற்றும் அதன் சுற்றுப்புற நகர் பகுதிகளின் வாக்குகள் எண்ணி முடிக் கப்பட்டுள்ளன. அந்தவகையில் இப் பகுதிகளில் 31148 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இவர்களில் 30936 பேர் தமிழீழமே தங்கள் முடிபென்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். 43 பேர் மட்டுமே தமிழீழம் வேண்டாம் என்பதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அவர்களில் சிலர் தவறுதலாகவும் தெரியாமலும், இல்லை என்ற வாக்கைப் பதிவு செய்துவிட்டதாகவும் பின்னர் தங்கள் தவறினை தெரிவித்து மீண்டும் வாக்குப்பதிவுக்கு அனுமதிக்குமாறு கோரியபோதும் சட்டவிதி முறைகளுக்கு அமைய அவர்களின் மீள் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இம் மாநாட்டில் கலந்து கொண்ட பிரஞ்சு பிரமுகர்கள் சிலர் தங்கள் கருத்துக்களை அங்கு முன்வைத்தனர். கிடைத்திருக்கும் மக்களின் இந்த ஆதரவானது, தமிழ் மக்கள் பிரச்சினை களை இங்கு மேலும் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தவும் உதவும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர். (ச-5)

## மின்சாரம் தாக்கி குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மயிலிட்டியைச் சேர்ந்த தினேஷ் அர்ச்சனா (வயது-22) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச ஊடக...

ஜனவரி 26 ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்களின் போது ஜனாதிபதிக்கு ஆதரவான வகையில் குறித்த ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார் என மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் எதிர்க்கட்சிகளுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலான செய்திகள் வெளியிடப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-3.5)

## யாழ். சமூகத்தின் கோரிக்கை...

கப்பட்டுள்ளதாவது,

கொழும்பில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது சரத்பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் அதனையடுத்து நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் பதவியேற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் உடனடியாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்விடயங்களில் தமிழ் மக்கள் தொடர்பிலான உடனடி பிரச்சினைகளான தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள், காணாமல் போனோர், போராளிகளின் புனர்வாழ்வு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள், 1983 முதல் உள்நாட்டிலும், வெளிநாட்டிற்கும் இடம் பெயர்ந்தோர் மற்றும் அவர்களது மீள் குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம் பெயர்ந்தோர் மற்றும் அவர்களது நிலங்கள் மீள கையளிக்கப்படல் யாழ். முஸ்லிம் அகதிகளின் மீள் குடியேற்றம். மலையகத்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்நிலைமைகள் ஆகியவை சம்பந்தமாக விரிவாக பேசப்பட்டுள்ளது.

குறிப்பாக மனோ கணேசன் எம்.பி.கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்த பொழுது அங்கு அவரை சந்தித்த யாழ். பல்கலைக்கழக சமூகத்தை சார்ந்த விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ். வணிக கழகத்தினர், யாழ். கத்தோலிக்க பேராயர் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள், நல்லை ஆதீன கர்த்தா மற்றும் இந்து சமூகத்தினர், யாழ். இஸ்லாமிய பள்ளிவாசல் சபையினர், அரசசார்பற்ற நிறுவத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோர் தெரிவித்திருந்த கருத்துக்கள் சரத் பொன்சேகாவிடம் தெரிவிக்கப்பட்டன.

பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கும், மனோ கணேசன் எம்.பிக்கும் இடையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பிலான விரிவான அறிக்கை நாளை வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## யுத்தக்காலத்தில் இடம்...

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் உயர் இராணுவ அதிகாரிகள் முதல் கடைநிலை சிப்பாய்கள் வரையில் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்குமான பொறுப்பினைத் தாம் ஏற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யுத்த மரபுகள் மீறப்படவில்லை. சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வி திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் மே மாதம் 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் விடுதலைப்புலிகளின் சிரேஷ்டதலைவர்கள் எவரும் சரணடையக் கோரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய...

அனுமதித்தனர்.

இந்நிலையில் சில கட்டுப்பாடுகளை நீக்கியுள்ள படையினர் யாழ். அரச அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்ட பஸ் சேவையில் பக்தர்கள் தினமும் ஆலயத்திற்குச் செல்ல முடியும் என அறிவித்துள்ளனர்.

அத்துடன் சேந்தான் குளம் பகுதியில் உள்ள சோதனைச்சாவடியில் பக்தர்கள் சோதனை செய்யப்படுவார்கள் என பலாலி படைத்தலைமையகம் தெரிவித்தது.

இதேவேளை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (ச-5)

## போலித் தரகர்...

காட்டப்படுகிறது.

வேறு நாடுகளுக்கு செல்லும் நோக்கில் பல இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் மலேசியாவை சென்றடைவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து போலி முகவர்கள் இலங்கை அகதிகளை ஏமாற்றுகின்றன.

இவ்வாறு வேறு நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் வரும் இலங்கையர்களிடம் பெரும் தொகைப்பணம் அறவிடப்படுகிறது.

தூதுவராலயங்கள், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தங்களது நிலைமைகளை அறிந்து கொள்ளுமாறு மலேசியாவில் சரணடைந்துள்ள இலங்கை யர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளின் முக்கியஸ்தர்களின் கொலைக்கு...

மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது,

தமது குடும்பத்தினருடன் இணைந்து வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு சரணடையவந்த பிரபாகரன், நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரை தாக்கி கொலை செய்துள்ளனர்.

அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் கொலை செய்துள்ளனர். இதற்கான சான்று யுத்தத்தின் இறுதிகாலத்தில் இராணுவ தரப்பிலிருந்து வெளிவரவில்லை. எனினும் முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவால் தற்போது இது வெளியாகியுள்ளது. சர்வதேச யுத்த நீதிகளுக்கு அமைவாக வெள்ளைக்கொடியுடன் வருபவர்களை கொலை செய்வது பாரிய அநீதியாகும். புலிகளின் தலைவர்கள் எத்தனை கொலைகளை செய்துள்ளார்கள் என்பது எமக்கு தேவையற்ற விடயம்.

தமிழர் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை சரணடையுமாறு சர்வதேசத்தின் ஊடாக மகிந்தவே அழைத்துள்ளார். அந்த அழைப்பை ஏற்றுவந்தவர்களை இவ்வாறு கொலை செய்துள்ளனர். இவ்வாறான யுத்த குற்றவாளிகளுக்கா உதவினீர்கள் என அமெரிக்காவில் உள்ள மக்கள் தற்போது அந்த அரசாங்கத்திடம் கேட்கின்றனர். யுத்த இரகசியங்களை வெளியிடுவது தவறு என அரசாங்கம் கூறுகின்றது. சரத்பொன்சேகா கூறியது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இன்று யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சரத் பொன்சேகா தெரிவிக்கின்றார்.

யுத்தம் நிறைவடைந்த காலத்தில் அவரும் தன்னை ஒரு வீரராகவே காட்டிக்கொண்டார். சரத்பொன்சேகாவும் யுத்த குற்றவாளியே. லசந்தவை இராணுவமா கொன்றது என அன்று கேட்டபோது அதனை மறுத்த சரத் பொன்சேகா தற்போது அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளார்.

சரத் பொன்சேகா மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் செய்த தவறுகளால் ஏற்படும் விளைவுகள் இவர்கள் இருவருக்கு மாத்திரமே சென்றடையும் என்றால் பரவாயில்லை.

சர் வதேச நாடுகள் இந்த பிரச்சினையை எடுத்து அதனை விசாரிக்க ஆரம்பித்தால் அதனால் இந்த நாட்டு மக்களுக்கே அதிக பிரச்சினை ஏற்படும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை நாம் ஐக்கிய நாடுகளிடம் தெளிவுப்படுத்தப் போவதில்லை. அவர்கள் எதனையும் செய்யமாட்டார்கள்.

சே குவேரா போன்றோர் கொல்லப்பட்டதற்கும் அவர்கள் எதனையும் கூறவில்லை. இந்த நாட்டில் இடம்பெற்ற இந்த சம்பவங்களை நாட்டு மக்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும். அதனையே நாம் செய்யவுள்ளோம். அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் உத்தியோகபூர்வமாக இன்னும் பேச்சு வார்த்தை நடத்தப்படவில்லை.

சிவாஜிலிங்கம், சந்திரநேரு ஆகி யோர் எனக்கு உதவுவதாக கூறியுள்ளனர். தமிழ் மக்களும் எனக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள் ளது என்றார் அவர். (ச-5)

## இந்தியாவில் கூட்டமைப்...

ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்கு ஆளும் தரப்பும் எதிர்த் தரப்பும் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் அரச தரப்பிலிருந்து பல் வேறு தரப்பினரும் கூட்டமைப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற முயன்றனர்.

ஆனால் அது கைகூடவில்லை. இதையடுத்துக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒவ்வொருவருடனும் அரச தரப்புச் சந்திப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

இந் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் வைத்துக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரினால் சாதகமான முடிபு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அங்கு சந்திப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

## பலமிழந்தது வோர்ட் சூறா...

மழையுடன் கூடிய கால நிலை நிலவும் எனவும் பலத்த காற்று வீசலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தெரிவித்துள்ள திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி வி.புஸ்பநாதன் வடபகுதி மக்கள் வானிலை தொடர்பாக அவ்வப்போது அறிவிக்கப்படும் செய்திகளை அறிந்து கொண்டிருக்குமாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக்காலை 8.30 மணிவரையான காலப்பகுதியில் 18 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி யாழ். குடாநாட்டில் பதிவாகியுள்ளதாகவும் கடந்ததை மாதம் முதல் நேற்றுக்காலை வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 19.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றுக் காலை முதல் கடும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச-7,14)

## சோசலிச...

பட்டு வருகின்றது. இதுவரையில் 13 அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் சார்பில் போட்டியிடும் சரத் ஹோங்கபகே நேற்று தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். (ச)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நடராசா

(ஓய்வுபெற்ற அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., தலைவர், விவசாய சம்மேளனம், அராலி தெற்கு )

சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா நேற்று (14.12.2009) திங்கட்கிழமை காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

ஆலடி ,அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(C-3934)



## S.L.A.S கருத்தரங்கு

**புதிய பிரிவு**

இன்று (15/12)தொடக்கம் புதன்(23/12) வரை வார நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறும். (4176)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.